உ

சிவமயம்

# அருள் ஒளி



அவுஸ்திரேலியா சிட்னி முருகன் தேர்




ஆனி மாத இதழ்

மலர் 23

சிட்னி முருகன் தீர்த்தம்

வெளியீடு : துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, இலங்கை.


கைலைக் காட்சியுடன்
நயினை
நயினை நாகபூஷணி அம்மன்




# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2004 தாரண வருடம் ஆனி மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் 23


## அறநெறிப் பாடசாலைகள் ஆலயந் தோறும் உருவாக்கப்பட வேண்டும்

இன்று இளைய தலைமுறையினரிடையே சீரிய பண்புநெறி சிதைந்து கொண்டு போவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. குறிப்பாக எமது யாழ் குடா நாட்டில் பல ஒவ்வாத சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. வாள்வெட்டு, குழுமோதல், வீண் அரட்டை, களவு, வழிச்சேட்டை போன்ற தவறான செயல்களில் சில இளையவர்கள் ஈடுபடுவது கண்டு பலரும் கவலை கொண்டுள்ளனர். இதற்கு அடிப்படைக் காரணம் ஆன்மிகத்துடன் கூடிய அறச்சிந்தனைகள் இளைய சமுதாயத்திடம் முறையாகச் சென்றடையாமையே காரணம். வெறும் ஏட்டுக் கல்வியில் மட்டும் பெற்றோர்கள் காட்டிய அக்கறை இத்தோல்வியைச் சந்திக்க வைத்துள்ளது. இந்துப் பண்பாட்டில் எம் முன்னோர்கள் மழலைப் பருவத்திலேயே மகிமையான அறக்கருத்துக்களை வீடுகளில் கற்றுக்கொடுத்தனர். பெற்ற தாய்மார்கள் மடியில் மழலைகளைக் கிடத்தி நீதிநெறிக்கதைகளை உணவு ஊட்டுவதுபோன்று ஊட்டினர். மகாத்மாகாந்தி தர்மங்களைக் கற்றது தன் தாயிடமே என சத்திய சோதனையில் எடுத்துரைத்தார். இன்று தாய், தந்தை, பாட்டி, பாட்டன், அறக்கல்வி போதித்த மரபைக் கைவிட்டு விட்டனர். இன்று அறிவு வளர்ந்திருந்தாலும், அறம் வளரவில்லை. "அறம் போல் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பிலார்" என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் கூற்று மிகவும் அர்த்தமுடையது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை இவற்றை ஐந்து வயதிலே முன்பு கற்பித்தார்கள். நவீன கல்வித்திட்டம் எனப் பல புதுமைகள் செய்து


பொது சன நூலகம்,
யாழ்ப்பாணம்

அறக்கல்வியை ஓரங்கட்டிவிட்டனர். எனவே சமூகம் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள் கூடுகின்ற இடம் திருக்கோவில்களும், பாடசாலைகளுமாகும். ஒவ்வொரு திருக்கோவில்களும் அறநெறிப் பாடசாலைகளைத் தோற்றுவித்துச் சிறார்களை ஆற்றுப்படுத்த வேண்டியது அவசியமாகும். கோவில்களை இடித்து இடித்துப் பலகோடி செலவு செய்யும் பக்தர்கள் பண்புள்ள சமுதாயத்தை உருவாக்குவதற்குத் திட்டமிட வேண்டும். அறநெறிப்பாடசாலை ஆலயங்களின் பிரதான பணியாக அமையவேண்டும். வாரத்தில் இரு நாளாவது கோவிலைச் சூழ உள்ள குழந்தைகளுக்கு அறநெறிக் கல்வி போதிக்கப்பட வேண்டும். யாழ் குடாநாட்டில் இப்பணியில் சில கோவில்கள் முன்மாதிரியாகச் செயற்படுகின்றன. எங்கள் துர்க்காதேவி தேவஸ்தானம், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், நீர்வேலி கந்தசாமி கோவில், சங்கானை முருகமூர்த்தி கோவில், மானிப்பாய் சைவ அபிவிருத்திச் சபை, ஆனைக்கோட்டை கரைப்பிரான் பிள்ளையார் கோவில் போன்ற ஆலயங்களும் நிறுவனங்களும் நடத்துகின்ற அறநெறிப் பாடசாலைகள் மேலும் இங்கு பெயர் குறிப்பிடப்படாத அறநெறிப்பாடசாலைகள் முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. ஆலயங்கள் தமது வருவாயில் இத்தகைய பணிக்குச் செலவு செய்வதே சாலப் பொருத்தமானதாகும். அறநெறி உள்ள சமுதாயத்தை உருவாக்குவதில் முதன்மைப் பங்காளிகளாக மாறுவது இன்று மிகவும் அத்தியாவசியமானதாகும்.

- ஆசிரியர்

**சிறு சிறு தகவல்கள்:**

இந்தியாவுக்கு வெளியே உள்ள மிகப்பெரிய இந்துக்கோவில் லண்டனிலே உள்ள **ஸ்ரீசுவாமி நாராயணன் கோவில்.**

இராமாயணத்தை வடமொழியில் முதல்முதல் எழுதியவர் **வான்மீகி முனிவர்** அதைத் தமிழில் எழுதியவர் **கம்பர்**

ஹிந்தி மொழியில் இராமாயணத்தை எழுதியவர் **துளசிதாசர்**

மகாபாரதத்தை வடமொழியில் சொன்னவர் **வேத வியாஸ** என்ற மகாமுனிவர் அவர் சொன்னபடி எழுதியவர் **விநாயகப் பெருமான்.** மகாபாரதத்தை தமிழில் பாடியவர் **வில்லிபுத்தூரன்** அதுவே வில்லிபாரதம்.

தமிழ் நாட்டில் கோயில்களின் நகரம் எனப்படுவது காஞ்சீபுரம்

காஞ்சீபுரத்தில் அம்பிகைக்குத்தான் தனிச்சிறப்பு. காஞ்சீபுரம் பிருதுவி (மண்) தலம் என்றும் சொல்வர். காஞ்சியில் உள்ள அம்பாள் ஸ்ரீகாமகோடி. காமாட்சி என்றும் கூறுவர்.

அன்னை இறைவனிடம் இரண்டு படி நெல் பெற்று முப்பத்து ஆறு அறங்களையும் வளர்த்த தலம் இது.

சுவாமி பெயர் **ஏகாம்பர்.**

# தெய்வமென்பதோர் சித்தம்

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி

**தங்கம்மா அப்பாக்குட்டி, அவர்கள்.**

உலகெலாமுணர்ந்தோதற் கரியவன் இறைவன். அவன் அடியார்க்கு அண்மையன். அன்பிலார்க்குச் சேய்மையன். நண்ணினர்க்கு நல்லன். நண்ணார்க்கு நலமிலன். இன்ப வடிவினனாக விளங்குவதால் அவன் திருவடிகளை அடைவோர் பூரண இன்பத்தையடைகின்றனர். இந்த இன்பமே அமைதியையும் தூய்மையையும் ஆனந்தத்தையும் நல்கிறது. துன்பத்தை வெறுத்து இன்பத்தையடைவதற்கே ஒவ்வொரு உயிரும் துடித்துக் கொண்டிருக்கிறது. அந்த இன்பத்தைக் கடவுள் நம்பிக்கையின் மூலமே அடைய முடியும். இன்பமே எந்நாளும் துன்பமில்லையென்று அப்பரடிகளும் செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே என்று சம்பந்த சுவாமிகளும், திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன் சீராடைக்கழல்கள் என்று சுந்தரரும், இன்பமே என்னுடைய அன்பே என்று மணிவாசகரும் பாடியருளியமை இந்த உண்மையைப் புலப்படுத்துகிறது. புற உலக வெப்பினால் வெதும்பி நிற்கும் உயிர்களுக்கு இறைவனது திருவடி நிழலே அமைதியான இன்பத்தை அளிக்கும் என்பது அருளாளர்களின் அனுபவம்.

தெய்வமென்பதோர் சித்தம் எல்லார்க்கும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்" என்று மணிவாசகப் பெருமான் கதறுகிறார். ஏனெனில் மானிடப் பிறவிதான் தெய்வமென்பதோர் சித்தம் ஏற்படுவதற்குரிய பிறவி. அந்தப் பெரு நோக்கத்துடன் தான் நமக்கு இப்பிறவி தரப்பட்டது. மணமுள்ள மலர் மேன்மையடைவது போல் தெய்வ வழிபாடுள்ளவனது வாழ்வு தூய்மையும் பொலிவும் அடைகிறது.

ஆனால் இந்த நிலை நமக்கு வரவேண்டியதும் அவனருளால் தான் நிறைவேறும். பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள் நம்மை விட்டகலாவிட்டால் அருள் தோன்றாது. வாழ்விலே பல காலத்தை முத்தி நெறியறியாத கூட்டத்தாரோடு செலவு செய்து விடுகிறோம். அதிலிருந்து ஒருவாறு தப்பினாலும் கல்வி ஆராய்ச்சிகள் நம் பாதையை மாற்றிவிடவும் கூடும். செல்வச் செருக்கும் நெறியை மாற்றுவதுதான். வறுமையின் கோரப்பிடியும் அப்படியே. இவற்றிலிருந்து நாம் ஒவ்வொன்றாகத்தப்பிச் செல்லும் போது தான் உயிருக்கு ஒரு தன்னுணர்வு ஏற்படுகிறது. அந்த உணர்வைக் கலைக்கும் மாயா சக்திகளையும் வென்றால் தெய்வமென்பதோர் சித்தம் நிலைபெற்றுவிடும். இந்த நிலையடைந்த தன்மையை மணிவாசகப் பெருமான் போற்றித் திருவகவலில் அழகாக அருளியிருக்கிறார்.

இறைவனுடைய திருவடியைப் பற்றுக்கோடாகக் கொண்டவர்களுக்கு உயிரைப் பற்றிய பாரம் நீங்கிவிடும். கடலில் விழுந்தவன் ஒன்றைப் பற்றிக்கொள்ளும் வரை தத்தளிப்பான். பற்றி விட்டால் இனித் தன் செயலில்லை என நினைத்து ஆறுதலடைவான். அருணகிரிநாதரும் முருகப்பெருமானை நோக்கி,

"எல்லாமற என்னை இழந்த நலம்
சொல்லாய் முருகா சுரபூபதியே"

எனக் கேட்டு நின்றார். அவ்வவர் வினைக்கேற்ப பிறவியைத் தருபவனும் வினை நீங்குவதற்குரிய வழியைக் காட்டுபவனும் அவ்வழியில் நிற்பவரை வலிய வந்து ஆட்கொள்பவனும் இறைவன் ஒருவனே.

"பவவினை நூறுங்கூட்டி சிவமதி தானும் கூட்டி
பதி பசு பாசங் காட்டி - மலம்மாய
படிமிசை போவென்றோட்டி அடிமையை நீவக்தேத்தி
பரகதி தானும் காட்டி அருள்வாயே"

என்று மேலும் வேண்டுகிறார் அருணகிரியார்.

பதி, பசு இரண்டும் சித்துப் பொருள்கள். பாசம் சடப்பொருள். முன்னைய இரண்டும் அறிவுடையவையெனினும் பசு, அறிவிக்க அறியும் தன்மையுடையது. பதி இயல்பாகவே அறியும் இயல்பினது. ஆன்மாக்களுக்கு உணர்த்துவதும் பதியே. இது ஆன்மாக்கள் அனைத்திலும் வியாபித்து அறிவுக்கு அறிவாய் நின்றுணர்த்துகிறது. இவ்வுணர்வு பெற்ற வழியே தெய்வமென்பதோர் சித்தமுண்டாகிறது. இந்த நிலையிலே நின்ற அப்பரடிகள்.

"என்னில் யாரும் எனக்கினியாரில்லை
என்னிலும் இனியா னொருவனுளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்
கெனனுளே நிற்கும் இன்னம் பரீசவே"

என்று பதிகம் பாடினார். மணிவாகப்பெருமானும் உலக பந்த பாசங்களினின்றும் நீங்கி இறையுணர்வு ஏற்பட்ட நிலையை திருவாசகத்தில் நயமுற எடுத்துப் பாடியுள்ளார்.

"நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன் வசமே வைத்திட்டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்னதோ இங்கதிகாரம்
காயத்திடுவாய் நின்னுடைய கழற் கீழ் வைப்பாய் கண்ணுதலே"

இவ்வாறு அருளாளர்கள் சென்ற வழியிலே நாமும் சென்று அனுபவித்தலைத் தான் வழிபாடு என்று சொல்கிறார்கள். "படு" என்ற பதம் "பாடு" என நீண்டு அனுபவித்தல் என்ற கருத்தை விளக்குகிறது. இந்த அனுபவ முதிர்ச்சியிலே மேம்பட்ட நாயன்மார்களும் ஆலய வழிபாட்டு நெறியில் தலை நின்றார்கள். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்ந்த சென்னியும் தந்த தலைவனுக்கு வழிபாட்டின் மூலம் நன்றி செலுத்தினர்.

ஆகவே, நாம் மானிடப்பிறவி எடுத்ததன் நோக்கம் இறைவன் திருவடியை அடைவதற்கேயென்பதும், இறையருள்தான் எமக்குத் தெய்வமென்பதோர் சித்தத்தை நல்கிறது என்பதும் அந்த உணர்வை ஆலய வழிபாட்டின் மூலம் நாம் பெறலாம் என்பதும் புலனாகிறது.

நன்றி - நாவலப்பிட்டி.
கதிரேசன் மலர்
- 1969 -

# சிவனடியார்கள்

முதுபெரும் புலவர் கலாபூஷணம்
**ஆசிரியர் வை. க. சிற்றம்பலம், அவர்கள்.**

அஃதாவது சிவபெருமானை முழுமுதலாகக் கொண்டு வழிபடும் அடியார்கள் என்பது பொருள். சிவபெருமானன்றி, திருவருட்சத்தி, விநாயகப்பெருமான், வைரவப் பெருமான், முருகப்பெருமான், வீரபத்திரப் பெருமான்களன்றி ஹரிஹர புத்திரராகிய ஐயனாரப் பெருமானையும் வணங்குவோரைச் சிவனடியார்கள் என நாம் கருத வேண்டும். ஒவ்வொரு ஆலயங்களிலும் அவ்வவ் மூலமூர்த்திக்கேற்ப உட்பிரகார மூர்த்திகளும் எழுந்தருளச் செய்து வழிபடுதலை நாமறிவோம். எனினும் சிவாகம விதிப்படி அமைந்த கோயில்களாக அமைக்கப்பட்டுளவேனும், ஆகம விதி முறையல்லாமல் சில ஆலயங்களில் சிவமூர்த்திகள் மாறாக அமைத்தும் வழிபாடுகளை நடாத்தி வருவதை நாமறிவோம்.

சைவ சமயிகளாகிய நாம் எப்படி ஆலயங்களிலே வழிபட வேண்டுமென்பதை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் தாமியற்றிய சைவ வினாவிடைகளில் நன்றாகக் காட்டியிருக்கிறார். சைவசமயத்தவராகிய எங்களுக்கு சைவவினாவிடை மிக இன்றியமையாத கட்டளைகளை விளக்குகின்றது. நித்திய கருமவிதி, சிவாலய தரிசனம், விரதவியல் என்பவற்றை நாம் நன்கு கடைப்பிடிக்க வேண்டியவர் என்பதை நாம் மறந்து விடலாகாது. வைகறையிலெழுந்த நாம் காலைக் கடன்களை முடித்த பின் சிவசின்னமாகிய விபூதியைத் தரிக்குமாற்றை கைக்கொள்ள வேண்டும்.

வடக்கு முகமாகவேனும், அல்லது கிழக்கு முகமாகவேனும் நின்று, வலக்கரத்தால் விபூதியை எடுத்து அண்ணாந்து "சிவசிவ" என்று உச்சியில் தொட்டு நெற்றியில் இருகடைப் புருவ எல்லையின் இடையில் தரிக்க வேண்டும். நாம் ஏதேனும் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த காலத்திலும் பக்தியுடன் விபூதியைத் தரித்தால் அந்நோயே நீங்கிவிடும்.

ஆலய தரிசனத்திலும், அங்கே செல்லும் சிவனடியார்கள் முதன் முதல் தூலலிங்கமாகிய கோபுரத்தை சிவலிங்கமென்றே நினைந்து வழிபடவேண்டும். ஆலயத்தினுள் சென்றதுமே முதல் விநாயகரை நினைத்து மும்முறை தலையிற்குட்டி இருகாதுகளை இருகையினால் மாறிப்பிடித்து மும்முறை தோப்புக்கரணம் போட்டபின் மூன்றுமுறை கீழே வீழ்ந்து வழிபடவேண்டும். வழிபடும்போது ஆண்கள் அட்டாங்கமாகவேனும் பெண்கள் பஞ்சாங்கமாகவேனும் வீழ்ந்து வணங்கற்பாலர்.

**அட்டாங்க நமஸ்காரமாவது:-**

தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய் புயங்களிரண்டு, ஆகிய எட்டு அங்கங்களும் நிலத்திற் பொருந்த வணங்குதல்.

**பஞ்சாங்க நமஸ்காரமாவது:-**

தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து அவயங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

இந்த நமஸ்காரங்களை மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது தரமேனும் பண்ணுதல் வேண்டும்.

நமஸ்காரம் முடிந்தபின் வீதியை வலப்பக்கமாக மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு தரம் சுற்றி வந்து வணங்குதல் வேண்டும்.

நாம் வணங்கும் போது அல்லது வீதியைச் சுற்றி வலம் வரும்போது தரிசிக்கும் மூர்த்தியை மனத்திற் பதித்து திருமுறைகளைப் படித்து அதன் வழி எண்ணத்தைப் பதித்து வணங்கவேண்டும். உண்மையான சிவனடியார் கூட்டம் இவ்வாறு வணங்கினால் இறைவனது திருவருளை இலேசாகப்பெற்று உய்தியடையும். சிவனடியார்கள் இறைவனது திருவருளுக்குப் பாத்திரமாக வாழ்ந்து வரவேண்டியராதலால், அவர்கள் தமது உள்ளத்தை இறைவன் எழுந்தருளியிருத்தற்கேற்ற கோயிலாக வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறானால் நமது உள்ளத்தை நாம் எப்படி வைத்துக்கொள்ளவேண்டும் என்பதை நன்கு அறிந்திருத்தல் அவசியம். அதற்குப் பஞ்சப் புலன்கள் வழி நாம் போகாமல் அடங்கி வாழவேண்டும்.

மற்றும் பொய்யாமை, கள்ளாமை, கொல்லாமை, மது உண்ணாமை, வியபிசாரம் ஆகிய குற்றங்களையும் நீக்கி ஒழுகவேண்டும். சிவனடியார்களென்றால் மேலும் கடைப்பிடிக்கவேண்டியன உண்டு. தருமமாக அன்பு பொருந்த நடக்க வேண்டும். என்னதான் அநீதியைக் கண்டும் கோபப்படல் ஆகாது. மற்றும் நான் என்பதையும் எனது என்பதையும் முற்றாக நீக்க வேண்டும். மற்றவரின் கல்வி, செல்வம், உயர்வுகளைக் கண்டு பொறாமைப்படலாகாது.

இந்த நிலையில் ஒருவன் தன் வாழ்வினைக் கடைப்பிடித்துவரின் அவ்வாறான அன்பனின் உள்ளமே இறைவன் எழுந்தருளியிருக்கும் கோயிலாகும். பெரியபுராணத்திற் கூறப்பெற்ற மெய்யடியார்கள் ஒவ்வொருவரும் இத்தகைய மெய்யடியார்கள் என்பதை நாம் உணர்ந்து, நாமும் மெய்யடியாராக எம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

இத்தகைய மெய்யடியார்களாகத் திகழ்பவர்கள் தமது ஊரிலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று, தம்மை இறைவன்பால் ஒப்பித்து வழிபட்டு வரவேண்டும். இறைவனின் திருவருளுக்குப் பாத்திரமாக வேண்டின், நாம் அக்கோயிலிலே செய்ய வேண்டிய தொண்டுமுறைகள் இன்னஇன்ன என்று வகுத்துக்காட்டி அப்படி அதன்வழி ஒழுகுபவர் பெறும் பயனையும் எழுதி வைத்திருக்கிறார்கள். அவை, சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இந்த நிலை ஒவ்வொன்றினையும் கடைப்பிடித்துவரின் அதனாலாம் எத்தனையோ பயன்களை நாமடையலாம். அதாவது, ஒவ்வொரு படியிலும் நாம் நின்று வருங்காலத்தில், இறைவனுக்கும் அவனை நினைந்து வணங்கும் எமக்கும் நாளடைவில் பெரிய அனுபவங்கள் தன்பாட்டிலேயே வந்து கைகூடும். மனமகிழ்ச்சி முகமலர்ச்சி வாழ்வின் சிறப்பெல்லாம் வந்து வாய்க்கும்.

**சரியை:-**

நந்தவனம் உண்டாக்கல், மலர் பறித்து இறைவனுக்குச் சாத்தக் கொடுத்தல், பூமாலைகட்டிக் கொடுத்தல்; இறைவனது கீர்த்திகளை உரைத்தல்; வணங்கும் கோயில்களைக் கூட்டல்; கழுவுதல்; விளக்கேற்றல்; சிவதொண்டருக்கு தான் தொண்டு செய்தல் ஆகியன.

**கிரியை:-**

கோயிலில் பூசைவேளை தூபமிடல், இறைவனுக்கு திருமஞ்சனத்திற்கேற்ற பால், தயிர், இளநீர், பனிநீர், வாசனைப்பொடி ஆகியன நல்கி, தாமும் சிவபூசை செய்பவராயிருத்தல்.

**யோகம்:-**

பஞ்சப்புலன்கள் அடங்கப் பெற்றவராய், தாம, இராசத, சாத்வீக குணங்கள் சிறிது மிலராய் கமலாசனத்தில் அமர்ந்து மூலாதாரம் (கணபதி) சுவாதிட்டானம் (பிரம்மா); மணிபூரகம் (திருமால்); அநாகதம் (உருத்திரன்), விசுந்தி (மகேஸ்வரன்), ஆக்ஞை (சதாசிவன்) ஆகிய ஆறாதாரங்களில் நின்று, அவற்றினூடாக நினைந்து, உணர்ந்து அதிலும் மேலாகிய சகஸ்ர தளத்தில் பெருவெளியில் இறைவனின் பிரவாகத்தை அறிந்து அதில் மூழ்கியிருப்பர். இது சிவானந்தப் பெருநிலை.

**குறிப்பு:-** இந்நிலையிலே மூழ்கியிருப்பவர்களுக்கு எமது கடவுளாகிய சிவபெருமான் பலவித காட்சிகளைக் காட்டிக்கொண்டிருப்பார். அக்காட்சிகளை கண்டு நாம் அடங்கி, அமைந்து, அதில் திழைத்து இருக்கவேண்டும். எந்த முறையை அநுட்டித்து வந்தோமோ, அந்த முறையில் நாம் வழுவாது கடைப்பிடிக்க வேண்டும். இதுதான் இறையின்பம் என்று நாம் வெருளக் கூடாது. இந்த மூன்று படிகளிலும் நாம் ஏறிஏறி வரும்போது இடையிடையே சிவானுபூதிகள் எமக்குத் தோற்றும்; கிடைக்கும் அசரீரி வாக்குகள் கேட்டல் நாம் ஒரு கருமத்தில் ஈடுபடும்போது எழுகின்ற சந்தேகங்களுக்கு வழிதிறத்தல் ஏதோ எமக்கென்று தேவைப்படும்போது அது, காத்திராப் பிரகாரமாக கைகூடல் இப்படிப்பல.

இவ்வாறு சிவானுபவங்களில் மூழ்கியிருப்பவர்களுக்கு உதவி புரிய இறைவன் எந்நேரமும் கூடவே திரிவான். சமயகுரவர் நால்வரது அற்புதங்களெல்லாம் அவர்களது உன்னத யோகத்தினால் அடிக்கடி கைகூடி வந்ததைநாமறிவோம். அவர்களெல்லாம் பொது நலமான தொண்டுகள் புரிந்து வந்தமையால் அடிக்கடி இறைவனது திருவருளைப் பெற்றபடியிருந்தனர்.

**ஞானம்:-**

நாலாம்படி ஞானம் முதல் மூன்று படிகளிலும் மூழ்கியிருப்பவர்க்கு ஞானம் தானே கைகூடும் இதுவே சிவயோகம்.

கல்லால நீழலில் தெட்சணா மூர்த்தியாயிருந்த எம்பெருமானிடம் சென்ற முனிவர்கள் நால்வரும் அப்பெருமானடி தொழுது எம்பெருமானே! நாம் சரியை கிரியை யோகத்திலிருந்து அவற்றையறிந்தோம். ஆனால் எமக்கு ஞானத்தின் நிலை புரியவில்லை? தேவரீரதை எமக்கு உபதேசித்தருள வேண்டும் என விண்ணப்பித்தனர். இறைவன் ஞானத்தை அம்முனிவர் உணருமாறு தமது கரத்தில் சின்முத்திரையைக் காட்டியபடி மௌனமாக இருந்தார்.

சிறிது நேரம் தாமும் மௌனமாக இருந்த முனிவர் நால்வரும் சுவாமியைப் பார்த்து "சுவாமி! இப்போது எங்களுக்கு ஞானத்தின் பொருள் விளங்கி விட்டது" என்று வணங்கிச் சென்று விட்டனர்.

இதிலிருந்து என்ன விளங்குகிறது? இந்த ஞானம் வாயினால் உணர்த்தப்படுவதன்று உள்ளத்துணர்வால் அந்த நான்கு முனிவர்க்கும் உணர்த்தியமை காண்க.

பக்தி மார்க்கமாக நின்று சிவபிரானை திருநீறு உருத்திராக்கம் முதலிய சிவ சின்னங்களுடன் பொருந்தி வாழும் சிவனடியார்களுக்கு ஞானமார்க்கமாகிய சிவானந்தப்பெரும் முத்தி தப்பாது கிடைக்கும் என்பது சத்தியம் முக்காலும் சத்தியமாம்.

# ஸ்ரீ அபிராமிப்பட்டர் வேண்டிய பதினாறு பேறுகள்

**திருக்கோலக்கா இராமநாத சிவாச்சாரியார்**
தலைமையாசிரியர் வேதசிவாகம பாடசாலை, சீர்காழி.

## 1. கலையாத கல்வி:-

நல்ல கல்வியின் நோக்கம் ஞானத்தை அடைவது. ஞானத்தை அடைய யோகமும் தவமும் அவசியம் என்பதை சேக்கிழார் “சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம் தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில் என்று அருளும்போது “தவமும் யோகமும்” பாதியில் கலைந்து விடாமல் இருக்க அடிப்படையான கல்வி கலையக்கூடாது என்று கேட்கிறார்.

## 2. குறையாத வயது:-

“நாம் இறைவனைப் பேசாத, போற்றாத நாளெல்லாம் பிறவா நாளே” என்பர் அப்பர் சுவாமிகள். பெரும் பற்றப்புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. “புள்ளிருக்கும் வேளூரானைப் போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே”. “பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம் மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேன் சேலுலாம்பழன வேலித் திருக்கொண்டீச்சரத்துளானே” இறை சிந்தனையோடு இருந்த நேரமே நமது நேரமாக நாளாகக் கணக்கிடப்படுவதால் அதில் குறைவு படாத வயது வேணுமெனக் கேட்கிறார்.

## 3. கபடுவாராத நட்பு:-

நட்பு இருவகைப்படும். 1. கபடுவாராத நட்பு 2. கபடு உள்ள நட்பு

கபடுவாராத நட்பு பத்து - (மனம், மொழி, மெய், இவற்றால் அமைவது)

மனத்தால் வருவது மூன்று: ஆசையறுத்தல், தெய்வசிந்தனை, தவப்பற்று.

மொழியினால் வருவது நான்கு: உண்மை பேசுதல், நல்லதையே பேசுதல், இனிமையாகப் பேசுதல், பயன் தரும் பேச்சாகப் பேசுதல்.

மெய் உடம்பினால் செய்யும் நற்செயல் மூன்று: ஆலயம் வலம் வருதல், தவம் செய்தல், தானம் செய்தல்.

இவை பத்தும் மனம், மொழி, மெய் இவற்றால் வரும் நல்ல நட்பாகும்.

கபடு உள்ள நட்பு பத்தாகும்: மனம், மொழி, மெய் இவற்றால் வருவது.

மனத்தால் வருவரு மூன்று: தீய எண்ணம் (பொறாமை), காம இச்சை, ஆசை இந்த மூன்றும் மனத்தால் உண்டாவது.

மொழியினால் வருவது நான்கு: பொய் சொல்லல், கோள் சொல்லல், கோபமாகப் பேசுதல், பயனிலாத சொல்லைச் சொல்லுதல்.

மெய் (சரீரத்தால் செய்யும் தீச்செயல்கள் மூன்று): களவு செய்தல், ஈனத்தொழில்

செய்தல், கொலை செய்தல் ஆக இந்த பத்து தீய நட்புகளும் வராமல் இருக்க, கபடுவாராத நட்பு வேணுமெனக் கேட்டுள்ளார்.

### 4. கன்றாத வளமை:-

உள்ளத்திற்கும் கண்களுக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது வளமையாகும். :திருவீழிமிழலை வீற்றிருந்த கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளங்குளிர என்கண் குளிர்ந்தனவே" என்பார் சேந்தனார். நல்ல காட்சிகளையே காண கன்றாத வளமை வேணுமென்கிறார்.

### 5. குன்றாத இளமை:-

ஏழாம் நூற்றாண்டில் இயற்றிய தேவாரத் திருமுறைகள் இன்றும் இளமையாகவும் புதுமையாகவும் பொலிவாகவும் திகழ்வது போல நமது எண்ணங்கள் செயல்கள் குறைவுபடாத இளமைப் பொலிவுடன் விளங்க வேண்டும் என்று கேட்கிறார்.

### 6. கழுபிணியிலாத உடல்:-

கழுபிணி என்பது பிறப்பு இறப்பாகும். பிறப்பு வேண்டாம் அப்படி வந்தால் "இறைவா உனது எடுத்த பொற் பாதமும் காணப் பெற்றால் மனித்த பிறவியும் வேண்டுவதே" என்பார் அப்பர் சுவாமிகள்.

ஆண்டவனே அடியேனுக்கு இறவாத இன்ப அன்பு வேண்டும் மேலும் பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் என்றும் உம்மை மறவாமை வேண்டும் ஐயனே! நீ நடனம் செய்யும் போது நான் மகிழ்ந்து பாடவேண்டும். உனது திருவடியின் கீழ் இருத்தல் வேண்டும் என்பார் காரைக்கால் அம்மையார். ஆகவே கழுபிணி பிறப்பு, இறப்பு இல்லாத முக்திநிலை கேட்கிறார்.

### 7. சலியாதமனம்:-

மனம் என்ற சொல்லைத் திருப்பினால் நம என்று வரும். நம, என்று கூறி மலரிட்டு இறைவனைப் பூஜிப்பதால் தளர்வரியா மனம், சலியாத மனம் கிடைக்கும் இறைவனை வழிபடுவதற்கு சலியாத மனம் வேண்டும் எனக்கேட்கிறார்.

### 8. அன்பகலாத மனைவி:-

நாயன்மார்களும் ஆழ்வார்களும் இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் வைத்துப் பாடியிருக்கிறார்கள். பெண் சம்பந்தமில்லாது தோன்றிய இறைவனை நாயகனாகவும் பெண் சம்பந்தத்தால் தோன்றிய நம்மை நாயகியாகவும் கருதப்படுவதால் இறைவனிடத்தில் அன்பு அகலாத மனைவியாக இருக்க வேண்டுகிறார்.

### 9. தவறாத சந்தானம்:-

சந்தாமென்பது இல்லறத்தார்க்குக் குழந்தைகளையும், துறவியர்களுக்கு சிஷ்யர்களையும் குறிக்கும். தவறாத சந்தானம், தவறான செயல்களைச் செய்யாத குழந்தை.

### 10. தாழாத கீர்த்தி:-

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று". "புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை இகழ்வாரை நோவதெவன்" புகழுடன் (கீர்த்தி)

வாழ வேண்டும் அந்தக் கீர்த்தி எக்காலத்திலும் தாழாத கீர்த்தியாக இருக்கவேணும் என்று கேட்கிறார்.

## 11. மாறாத வார்த்தை:-

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனிலாச்சொல்". நான் கூறும் சொல்லை (வார்த்தையை) நான் மாறாமலும் மற்றவர்கள் மாற்றாமலும் இருக்க அருள்வாய் எனக் கேட்கிறார்.

## 12. தடைகள் வாராத கொடை:

என்மனம் முன்பு தர்மம் செய்ய விரும்பியும், பின்பு அதே மனம் வேண்டாமென்றோ அல்லது குறைவாகச் செய்யத் தூண்டும் மனத்தினால் கொடையளிக்க வரும் தடைகள் நீங்கவும் பிறரால் ஏற்படும் தடைகளும் வராமல் அருள்வாய்.

## 13. தொலையாத நிதியம்:-

நிதிக்கு பத்துப் பெயர்கள். பணம், காசு, செல்வம், தனம், நிலம், ஸ்ரீ(திரு), சொர்ணம், லட்சுமி, ரத்தினம், ஐசுவரியம். பணம் பத்தும் செய்யும் என்பது பழமொழி. தொல்லை தரக்கூடிய நிதிகள் ஒன்பது. முன்பு இன்பத்தையும் பின்பு துன்பத்தையும் தரச்செய்யும். ஆனால் ஐசுவரியமானது ஈசுவர சம்பந்தத்தால் அறத்தின் வழி வருவதால் ஐசுவரியம் நன்மையே தரச் செய்யும் என்பதால் தொ(ல்)லையாத நிதியைக் கேட்கிறார்.

## 14. கோணாத கோல்:-

மனுநீதிச்சோழன் போல் எந்தக் காலத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் நடுநிலைமையிலிருந்து வழுவாமல் இருக்கும் பேற்றை வேண்டுகிறார்.

## 15. ஒரு துன்பமில்லாத வாழ்வு:-

மரணமிலாப் பெருவாழ்வு என்பார் வள்ளலார். பெருவாழ்வு-துன்பமில்லாத வாழ்வு. அதுதான் முக்திப்பேறு. பேரானந்தப் பெருவாழ்வு ஆகும்.

## 16. தூய்ய நின்பாதத்தில் அன்பு:-

"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது" தனக்குவமையில்லாதவன் இறைவன். அவன் திருவடிகள் தான் எல்லா நலங்களையும் தரும். தூக்கிய திருவடியே துணை என்பதை நடராஜப்பெருமான் தனது இடது கையால் இடது பாதத்தைச் சுட்டிக் காட்டுவதையும், திருமாலாகிய திருப்பதிப்பெருமான் வலது கையினால் வலது பாதத்தைக் காட்டி இந்தத் திருவடிகளே உங்களை வாழ்விக்கும். பாதகமலங்கள்தான் பாதக மலங்களைப் போக்கும். அந்தத் திருப்பாதங்களில் எப்போதும் அன்புடன் இருக்க அருளவேணும் என்று கேட்கிறார்.

சுபம்.

**நன்றி - ஸ்ரீ குமரகுருபரர்**

# இந்து சமயத்தின் மையம்

**கலாநிதி கவிஞர் வி. கந்தவனம் அவர்கள்**
குரும்பசிட்டி, (கனடா)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

மேலும், மனத்தைக் கட்டுப்படுத்தும் சுதந்திரமும் மனத்துக்குத்தான் வழங்கப்பட்டுள்ளது. வேறொன்றுக்கோ வேறொருவருக்கோ அல்ல. அதனால் இது அடக்குமுறை ஆகாது.

சமயம் எந்தவகையிலும் மனிதனை அடக்க முயல்வதில்லை. கீதோபதேசத்தில் கிருஷ்ணபகவான் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்?
தருமத்துக்கு.
தருமம் யாருக்காக? மனித குலத்துக்காக உலகத்துக்காக.

சிவபெருமானைத் தாங்கும் இடபமும் வேறு யாருமல்ல-தரும தேவதைதான்.

சமயத்துக்கு மற்றொரு பெயர் தருமம். அதனால் இந்து சமயம் இந்து தருமம் என்றும் வழங்கப்பெறும். தருமம் வடமொழி. அறம் தமிழ்ச்சொல்.

அறமும் மனத்திலிருந்து தான் தொடங்குகிறது. "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்றார் வள்ளுவர் பெருமான்.

மனத்துக்கு இரண்டு குணங்கள். ஒன்று தேவகுணம். மற்றையது அசுர குணம். இந்த இரண்டு குணங்களுக்கிடையிலும் அடிக்கடி போராட்டங்கள் நடைபெறும்.

மனம் ஒரு போராட்டக்களம்.

மனப் போராட்டத்தை விளக்க எழுந்த கதைகள்தாம் இராமாயணமும் பாரதமும். இராமாயணத்தில் இராமன் தேவகுணத்தின் பிரதிநிதி. இராவணன் அசுர குணத்தின் பிரதிநிதி. பாரதத்தில் இக் குணங்களை முறையே பாண்டவரும் கௌரவரும் தாங்குகின்றனர்.

தேவர்-அசுரர் போராட்டங்கள் பற்றிய புராணக் கதைகளின் தத்துவமும் இதுதான். அவை மற்றுமொரு முக்கியமான கருத்தையும் முன்வைக்கின்றன. அது தேவர்-அசுரர் போராட்டத்தை தீர்க்க வல்லவரும் தீர்த்து வைத்தவரும் இறைவனே என்பது.

தேவ குணத்துக்கும் அசுர குணத்துக்கும் இடையிலான போராட்டமும் முற்றுப்புள்ளி இல்லாத ஒரு தொடர்கதை. இதனால் அலைப்புற்று ஆற்றாத மனம் ஈற்றில் இறைவனை நாடி அமைதி பெறுகின்றது.

**"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்**
**கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது"**

என்பது வள்ளுவப்பெருமான் வாக்கு.

ஆக, மனத்தை நல்வழிப்படுத்தி மக்களை வாழ்வாங்கு வாழவைப்பதுதான் இந்து சமயத்தின் தலையாய நோக்கம். அதனால் மனமே இந்து சமயத்தின் மையம் ஆகின்றது. மனம் இன்றி இந்து சமயம் இல்லை. இந்து சமயம் என்ன, எதுவுமே இல்லை!

(முற்றும்)

சிறுவர் விருந்து

# திருக்கோயில் வழிபாடு ஏன்?

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்.

அன்புமிக்க குழந்தைகளே!

அன்பான வாழ்த்துக்கள்!

புதுவருடத்தை மகிழ்வாகக் கொண்டாடினீர்கள். பெரியவர்களை வணங்கி ஆசி பெற்றீர்கள். கோயிலுக்குப் போய் சுவாமி கும்பிட்டீர்கள். அப்படித்தானே? நல்லது. "கடவுள் எங்கும் இருக்கிறார் இருந்த இடத்தில் கடவுளைக் கும்பிட்டுப் பலன்பெறலாம். ஏன் கோயிலுக்குப் போகவேண்டும்?" என்று சிலர் கேட்பார்கள்........ இந்தக்கதையிலே அதற்கு விளக்கம் உண்டு. வாசியுங்கள்.

சோழநாட்டிலே கஞ்சனூர் என்ற ஒரு ஊர் உள்ளது. அங்கே ஒரு சிவன்கோயில் இருக்கிறது. அங்கே இளமைக்காலத்தில் பூசை செய்தவரும் முதுமையில் சைவசமய உண்மைகளை ஆய்ந்து நூல்வடிவில் எழுதி மகிழ்ந்தவருமான ஒரு உத்தம அந்தணர் இருந்தார்.

அவர் பெயர் "அரதத்த" சிவாச்சாரியார். ஒரு முறை சமண மதத்தவர்களுடன் வாதிட நேர்ந்தது. நெருப்பிலே பழுக்க காய்ச்சிய கோடரி மீது ஏறி நின்று சைவசமய உண்மையை எடுத்துக்கூறி வென்றவர் அவர்.

அதுமட்டுமல்ல; அவர் பூஜை செய்யும்போது நந்திக்கு அறுகு சாத்துவார்.

"ஏன் இந்தக் கல்லுக்கு அறுகு? அது சாப்பிடுமா?" என்று புறமதத்தவர் கேலி செய்ததைக் கண்டு, ஒரு நாள் தன் தவவலிமையாலும், பக்திப் பெருமையாலும் பூஜை வேளையில் எல்லாரும் காணும்படி பலிபீடத்துக் கருங்கல் நந்தி உயிர்பெற்று எழும்பி அறுகம்புல்லைச் சாப்பிடச் செய்து காட்டியவர். அப்படிப்பட்ட மகான் முதிர்ந்த வயதில் சாஸ்திர ஆராய்ச்சியிலும், தியானத்திலும் ஆழ்ந்து இருந்த பல சமயங்களில் கோயிலுக்குப் போக முடியவில்லை.

ஒருநாள் அரதத்தச் சிவாச்சாரியார் கோயிலுக்குப் போனார். அன்று அங்கே ஒரு மண்டபத்தில் தூணிலே ஒரு பெண்மணியைக் கட்டிவைத்திருந்தார்கள். தர்மகர்த்தாவாக இருந்த ஒருவர் மிகுந்த கோபத்தோடு அப்பெண்ணைச் சாட்டையால் அடித்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த அரத்தர் "ஏன் அந்த அம்மையை அடிக்கிறார்கள்?" என்று ஒரு தொண்டரைக் கேட்டார். கோயில் விளக்கேற்றுவது, தூபமிடுவது, சுவாமி ஊர்வலத்தில் நடனமாடுவது அந்தப் பெண்ணின் கடமை. அவள் இரண்டு வாரங்களாகக் கோயிலுக்கு வரவில்லை. கடமை தவறிய அவளை அறங்காவலர் தண்டித்து அடிக்கிறார் என்று அந்தத் தொண்டர் தெரிவித்தார். இதைக் கேட்ட அரதத்தர் மௌனமாக ஒரு தனியிடத்தில் போய் இருந்தார். விம்மி விம்மி அழுதார்.

இவர் அழுது கொண்டிருந்ததைப் பலரும் கண்டார்கள். "ஏன் இவர் அழுகிறார்?" என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள். தாங்கள் தாங்கள் நினைத்ததை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள் இப்போ அரதத்தர் அழுதுகொண்டிருக்கிறார் என்ற செய்தி அறங்காவலருக்கும் போனது.

அவர் திகைத்துப் போய் ஓடிவந்தார்
“சுவாமி! தாங்கள் ஏன் அழுகிறீர்கள்?” என்று மிகப் பணிவாக அரதத்தரிடம் கேட்டார். கோயில் பணி செய்யும் பணிப்பெண் சிலநாள் கோயிலுக்கு வரவில்லை என்பதற்காகக் கட்டிவைத்து அடிக்கிறீர்கள் இனி அவள் ஒழுங்காக வருவாள். நானும் பலநாள் கோயிலுக்கு வந்து கும்பிடவில்லை. என்பாவம் தீர என்னைக் கட்டிவைத்து அடித்துப் புத்திபுகட்ட ஒருவரும் இல்லையே! அதற்காகத்தான் அழுகிறேன். எனது வாழ்நாளில் பல நாள் “ஆலயம் தொழாத நாளெல்லாம் வீணாகி விட்டதே” என்று சொல்லி மேலும் கண்ணீர் சிந்தி விம்மி விம்மி அழுதார் அரதத்தர்.

சூரிய ஒளி எல்லா இடத்திலும் இருக்கிறது. ஒரு இடத்திலே பஞ்சைவைத்தால் பஞ்சு எரியுமா? இல்லையே. பஞ்சிற்கும் சூரிய ஒளிக்கும் இடையிலே சூரியகாந்தக் கண்ணாடியை வைத்தால் நிமிடத்தில் பஞ்சு எரிந்து போகும் அல்லவா? ஏன்? சூரியகாந்தக் கண்ணாடி சூரிய ஒளியைக் குவித்து, அதன் சூட்டைத் திரட்டித் தருகிறது அல்லவா? கோயிலிலே உள்ள சுவாமி விக்ரகமும் அப்படித்தான் முறைப்படி பிரதிட்டை செய்யப்பட்ட திருவுருவம். (விக்கிரகம்) தெய்வ ஆற்றலைத் திரட்டி நிறைவாக நமக்குத் தரும். ஆகவே, கோயில் வழிபாடு மிக மிக அவசியம். விளங்குகின்றதா பிள்ளைகளே! தினசரி கோயிலுக்குப் போய் வழிபடுங்கள் நலம் பெறுங்கள்!.

## “சிவத்தமிழ்ச் செல்வியின் சிறப்பிதழ்”



கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி

சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றி வரும் துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சேவையைக் கௌரவிக்கும் முகமாகத் தை 2005 **“சிவத்தமிழ்”** சிவத்தமிழ்ச்செல்வியின் சிறப்பிதழாக மலர்கிறது.

சிறப்பிதழுக்கு அவர்தம் சேவையை கவிதையாகவோ கட்டுரைகளாகவோ எமக்கு 01-10-2004 முன்னதாக அனுப்பி வைக்கவும். இலங்கையில் வசிப்பவர்கள், கீழ்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். ஏனையோர் நேரடியாகச் சிவத்தமிழ் முகவரிக்கும் அல்லது மின்னஞ்சலுக்கும் அனுப்பிவைக்கலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

**இலங்கை**
**Dr. Vani, Sivarajan**
118 Vivekananda hill,
colmbo 13
Sri-lanka.

**சிவத்தமிழ்**
Dr. M. K. S. Sivakumaran, B. F. A
**Postfach 2765**
**58477 Lüdenscheid**
Germany.

Vettimaniy@hotmail, com

# நல்லவற்றைக் கேட்டலே செவிச் செல்வம்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்.**

"செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" என்கிறார் திருவள்ளுவர். வள்ளுவர்வாக்கு பொய்ப்பது போலத் தோன்றலாம்; ஆனால் உண்மையில் பொய்ப்பதில்லை. அது பொய்யாமொழி.

செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையாய செல்வம், செவிச் செல்வம் ஆகும். அப்படியாயின் பொருட் செல்வம், என்று ஒரு கேள்வி எழுகின்றது. "காசேதான் கடவுள் அப்பா;" என்று காசைக் கடவுளாகக் கும்பிடுகின்ற தற்காலத்தில், "செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்" என்றால், அது சீரணம் ஆவது கஷ்டம் தான்.

பிறர் சொல்ல மற்றையோர் கேட்பது என்பது இன்று காணுதற்கு அரிதாகி வருகின்றது. செவிச் செல்வத்தை மனிதர்கள் புறக்கணித்து வருதலைத் தற்போது எங்கும் துலக்கமாகக் காணமுடிகின்றது. பெற்றோர் சொல்வதைப் பிள்ளைகள் கேட்பதில்லை. கணவன் சொல்வதை மனைவியோ; மனைவி சொல்வதைக் கணவனோ கேட்கும் நிலையில் இல்லை. மூத்தோர், பெரியோர் சொல்வதை இளையோர் கேட்கின்றார்கள் இல்லை. ஆசிரியர்கள் சொல்வதை மாணவர்கள் கேட்பதில்லை. தலைவர்கள் சொல்வதை தொண்டர்கள் செவிமடுப்பதில்லை. எவராதல் நியாயமாக எடுத்துக் கூறினால், அதை எவருமே கேட்கத் தயாராக இல்லை. இன்று செவிச்செல்வம் மதிப்பிழந்து விட்டமையையே இவை சுட்டுகின்றன.

செவிச்செல்வம் மதிப்பிழந்தமைக்குப் பொருட்செல்வத்தின் மதிப்பேற்றமும் காரணமாகலாம். பொருட்செல்வம், புகழ்ச்செல்வம், அகந்தையையும், செருக்கையும் ஏற்படுத்தும் தன்மையது. அதனால் பிறர் சொல்வதைக் கேட்க, அவர்கள் தயாராகவில்லை.

"கற்றிலனாயினும் கேட்க" என்று வள்ளுவர் கூறிவிட்டு, அதன்பின், "எனைத்தானும் நல்லவை கேட்க" என்று சற்று அழுத்திக் கூறுகின்றார்.

கல்வி கற்றல் என்பது தனிமனித அனுபவம் எனில் கேட்டல், பிறர் வாயிலிருந்து பிறர் அனுபவங்களும் பெறப்படுகின்றன. கற்றல் மூலம் பெற்ற தனிமனித அனுபவம், கேட்டல் மூலம் மேலும் விரிவுபெறுகிறது.

எனவேதான் வள்ளுவரும், "பிறர்தரும் நல்ல சொற்களுக்குச் செவிமடுத்துக் கேட்டு, அவற்றில் பொதிந்துள்ள நல்ல அரிய கருத்துக்களைப் பெறாதவர்கள், நல்ல பண்புடையவர்களாக இருக்க முடியாது" என்கிறார்.

கல்வியை முறையாகக் கல்லாதவரும், பிறர் சொல்லைக் கேட்டு, அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நல்லவர்களின் சொற்களைக் கேட்பவர்கள், தமது அறிவைப் பெற்றுக்கொள்வது மாத்திரமல்ல, கற்றல் மூலம் பெற்ற, அறிவை செம்மைப்படுத்தியும் கொள்வர். அதனால் கற்றலிலும் கேள்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது தமிழர் மரபாக அமைந்தது.

'கேள்வி' எனும் போது எப்படிப்பட்ட விடயங்களைக் கேட்கவேண்டும்; எத்தகையவர்களிடமிருந்து கேட்க வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

இன்று பலதும் பத்தும், குப்பையுங் கூழங்களும், காற்றில் மிதந்து வருகின்றன. அத்தகைய கேட்கக்கூடாதனவற்றைக் கேட்பதில் பலருக்கு ஆர்வம் உண்டு. அதனால் கெட்டழிந்து போகின்றார்கள். அவை செவிச் செல்வங்கள் அல்ல. கர்ண கொடூரங்கள். அவற்றைக் கேளாமல் விடுவது தான் செல்வம். கேட்போர், கேட்டவற்றைப் பிரிந்துணர்ந்து நல்லவற்றை மாத்திரம் ஏற்கும் திறனையும் வளர்த்துக் கொள்ளுதல் குறிப்பாகத் தற்காலத்தில் அத்தியாவசியமாகும்.

எல்லோருடைய வாய்மொழிகளும் நன்மைபயப்பனவாக இல்லை. அறிவின் கருவூலமாகவும் இல்லை. சில வசைகளாகவும், வம்புகளாகவும், உள்ளன. இன்னுஞ் சில, மனிதர்களை வாழ்வில் வழுக்கிவிழச் செய்கின்றன. எனவே தான் ஆழ்ந்த அறிவும் உயர்ந்த ஒழுக்கமும் கொண்டு விளங்கும் சான்றோர்கள், பெரியோர்கள் யாவர் எனத்தெளிந்து அவர்களின் சொல் கேட்டு ஒழுகவேண்டும் எனப்படுகிறது. நம்மில் அன்பும், கருணையும் கொண்டு; எமது வாழ்வு முன்னேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ள எமது பெற்றோர்கள், மற்றும் குடும்பத்தில் மூத்தவர்கள் ஆகியோரின் நல்லுரைகளையும் அறிவுரைகளையும் கேட்டு அதன்படி ஒழுகவேண்டும். நம்மை நல்வழிப்படுத்தும் நல்லாசிரியரின் சொற்களுக்கு மதிப்பளித்துக் கட்டுப்பட்டு வாழவேண்டும்.

"சொற்கேளாப் பிள்ளையினால் குலத்துக்கீனம்" என்பது உணர்ந்து கொள்ளற்பாலது.

முதிர்ந்த அறிவும், அறநெறிபிறழா வாழ்க்கையும், நன்னடத்தையும் கொண்டவர்களுடன் நட்புக் கொள்வதால் அவர்களிடம் நல்லவற்றைக் கேட்கும் வாய்ப்பு ஏற்படும். மாறாக, கூடாதவர்களின் நட்பைப் பெறுவதால், அவர்களின் தீய வார்த்தைகளைக் கேட்டுத் துன்பப்பட நேரிடும்.

இன்றைய காலகட்டத்தில், பொய்யுரைகளையும், தீய கருத்துக்களையும் கேளாமல் விடுதலும்; "எனைத்தானும் நல்லவை கேட்டலும் தான் அறிவுடைய செயல்". அதுவே செல்வத்துள் செல்வம், செவிச்செல்வம் ஆகும்.

## கோபுரவாசலின் தத்துவம்

ஆலயங்களில் நீங்கள் ராஜகோபுர வாசலில் பிரவேசம் பண்ணும் தத்துவம் இதுதான். புறக்கரணங்களும் – அகக்கரணங்களும் நம்மிடம் இருந்தாலும், கடவுள் நாட்டம் கொள்ளும்போது, மனம் மட்டுமே நமக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஏனைய கரணங்களையெல்லாம் இருக்கிறபடி வைத்து விட்டு, மனம் இறைவனை நாடி உள்முகமாகப் போகவேண்டும் என்பது கோட்பாடு. பஞ்சேந்திரியங்களைக் கொண்டும், மனம், புத்தி முதலியவைகளைக் கொண்டும் புறஉலகை அறிகின்றோம். புறஉலகை அறிகிற செயலை வெளியே அப்படியே நிறுத்தி வைத்துவிட்டு, மனத்தைத் துணையாகக் கொண்டு, பரம்பொருளை நாடி உள்முகமாகப் பயணம் செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டையே, ராஜகோபுர வாசலின் வழியாக ஆலயத்தில் நுழைவது விளக்கிக் காட்டுகிறது. **– சுவாமி சித்பவானந்தா**

சென்ற இதழ் தொடர்ச்சி

**(அவுஸ்ரேலியா சிட்னி மாநகரில் அமைந்துள்ள முருகன் கோவில் தமிழ்க்கல்வி கலாசார மண்டபத்தில் "திருவாசகமும் நாமும்" என்ற தலைப்பில் உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. க. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் ஆற்றிய உரையின் மூன்றாம் பாகம்)**

# திருவாசகமும் நாமும்

பால் நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

என்று பாடுகிறார் பிடித்தபத்தில்.

அழுமுன்னே அறிந்து பாலூட்டும் தாயைப் பார்க்கிலும் இரக்கமுடையவன் இறைவன் என்கிறார் மாணிக்கவாசகர். மறப்பும் நினைப்பும் உடையவள் தாய். ஆனால் மறப்பும் நினைப்பும் இல்லாது எப்பொழுதுமே உதவுகின்ற கடவுளின் கருணை எல்லையற்றது, தாயினுஞ் சிறந்தது என்கிறார். இடைவிடாது உறுதியாக இறைவனைப் பற்றினால் இறைவன் நம்மைவிட்டு அகலமாட்டான். எங்களுடனேயே இருப்பான் என்று கூறுகின்றார். அவரின் பாடல்கள் பக்தி வழி நடப்பவர்களுக்கு ஊக்கம் அளிக்க வல்லன. தெய்வீக அன்பானது எப்பொழுதும் எங்கும் வியாபித்துள்ளது. அது உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்துள்ளது. அதை எந்தநேரம் வேண்டுமானாலும் நாங்கள் எங்கள் உதவிக்காக அழைக்கலாம். உதாரணமாக மின்சாரம் எங்கும் வியாபித்துள்ளது. ஆனால் அதை வரவழைக்க வேண்டுமானால் அதற்குரிய சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். மின் கலங்கள், மின்விளக்குக் கொண்டு உரியதைச் செய்தால் வெளிச்சம் தெரிவதில் இருந்து மின்சாரம் எங்கும் வியாபித்து உள்ளதை நாங்கள் உணர்ந்து கொள்ளலாம். இறை அன்பும் அப்படித்தான். உள்ளம் பதப்பட்டுவிட்டால் இறைவனை, இறையன்பை எந்த நேரத்திலும் அழைத்துக் கொள்ளலாம். ஆனால் அதை நாங்கள் உணர்வதில்லை. காரணம் எங்கள் உள்ளங்கள் சாத்தப்பட்டுவிட்டன. சாத்திய பின் பூட்டுப்போட்டு திறப்பையும் தொலைத்துவிட்டோம் அல்லது வீசி எறிந்து விட்டோம்.

திறப்பை எடுத்துக் கதவைத் திறக்கவே மாணிக்கவாசகர் திருவாசகத்தை எமக்கு அருளினார். அதுமட்டுமல்ல, கதவைத் திறந்தால் போதாது, உள்ளே தூசியும் ஒட்டடையும் வெகுவாக நிறைந்து இருக்கிறது. அவற்றையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டும். இவற்றைச் செய்ய எங்களுக்கு நேரம் இல்லை. கதவைத் திறந்தாலும் சடுதியாக உள்ளே போய் வெளியே வந்துவிடுகிறோம். அறையில் உள்ள ஆணவம், அகந்தை ஆகிய ஒட்டடைகளை அப்புறப்படுத்தாமல் வைத்துள்ளோம். எங்கள் உடல் சம்பந்தமான சுகத்தையே பெரிதாக நினைத்து வெளியே சென்றுவருகின்றோம்.

பக்தியால் திறந்த உள்ளந் தான் இறைவனை நாடமுடியும். இறைவனில் ஐக்கியமாக முடியும். தனிமனித அன்பு நிரந்தரமானது அல்ல. அது மாயை. அந்த மாயை அகல திருவாசகம் வழி செய்கிறது.

திருவாசகத்தில் ஏதாவதொரு பாடலை நாங்கள் தெரிந்து வைத்திருந்தாலே போதும். தெப்பமாக எங்களைக் கரை சேர்க்க அது உதவும். திருவாசகம் எங்களுக்கு முக்கியமாக உணர்த்துவது பணிவு என்பதையே. இறைவனுக்குப் பணிந்தோமானால் இறைவனின் படைப்பு

களின் மேல் அன்பு பாராட்டப் பழகிக் கொள்வோம். ஒளவையாரிடம் முருகன் கேட்கிறான் உலகில் பெரியது எது அம்மையே? என்று.

பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ அரவனுக்கொருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர்தம் பாகத் தொடுக்கம்
இறைவனோ தொண்டர் தம் உள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே

என்கிறார் ஒளவைப்பாட்டி. இறைவனிலும் பெரியவர்கள் இறை தொண்டர்கள் என்று கூறுகிறார் தமிழ்ப்பாட்டி. இறைதொண்டர் களின் முக்கிய குணாதிசயம் பணிவு. "பணிந்தவர்கள் பரமனிலும் பெரியவர்கள்" என்றார் ஒளவைப்பாட்டி. எல்லாம் இறைவன் செயல் என்று ஆகிவிட்டால் எம்மால் ஆகக் கூடியது எதுவும் இல்லை என்று ஆகிவிடும். யாதும் இறைவன் செயல் என்று மனம் ஏற்றுக் கொண்டுவிட்டால் இருமையின் பாதிப்பு எங்களிடம் இருந்து அகல்கிறது. அதாவது நன்மை தீமை, நட்டம் இலாபம், வெற்றி தோல்வி என்ற இருமைகள் எம்மைப் பாதிக்கா. அவை யாவுமே அவனால் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட தென்று அறிந்து கொள்வோம். அப்படியா னால் எங்களால் செய்யக்கூடியது என்ன? ஒன்றுமில்லை. எல்லாமே அவனால்தான் செய்வதாக ஆகிவிடுகிறது. அவன் நரியைப் பரியாக்குவான். பிட்டுக்கு மண் சுமப்பான். எதுவும் செய்வான். அப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. எம் கடன் பணிசெய்து கிடப்பதே என்றுஆகிவிடுகிறது. இறைசிந்தையுடன் எம் நாளாந்த கடமைகளைச் செய்வது தான் எம்பணி. எங்கெங்கு இருக்கின் றோமோ அங்கு எங்களுக்குப் பணிகள், கடமைகள் இருக்கின்றன. அவற்றைச் செய்வது தான் நாங்கள் இறைவனுக்குச் செய்யும் கைங்கரியம் ஆகிவிடுகிறது. அப்பொழுது அவன் அருளாலே அவன் தாள் வணங்கும் பாக்கியம் எம்மை நாடி வருகிறது. கடமைகளைச் செவ்வனே செய்தால் கடவுள் தானாகவே எம்மை நாடி வருவான். இதனால்தான் இந்து மதம் உரிமைகளிலும் பார்க்க கடமைகளை வலியுறுத்தி வந்துள்ளது. இறைவன் பால் சித்தத்தை நிறுத்தி எம் கடமைகளைச் செய்வதே எங்கள் தர்மம் ஆகிவிடுகிறது. கடமைகள் பல வகைப்படும். எங்களுக்கு நாங்களே செய்ய வேண்டிய கடமைகள் முதலாவது அதாவது உடலை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும். உள்ளத்தை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும். எங்களை நாடி வந்த குடும்பத்தைத் தாமாக அவர்கள் பராமரித்துக்கொள்ளும் அளவுக்கு மேம்பட வைத்தல் இரண்டாவது கடமை. சமுதாயக்கடன், நாட்டுக்கடன், உலகக் கடன், இறைவன் கடன் என்று கடமைகள் நீண்டு கொண்டே போவன. இவை யாவும் சுயநல சிந்தையில்லாது இறை சிந்தையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். நாங்கள் எங்கள் கடமைகளை ஆற்றுவது மற்றவர்களுக்கு நன்மை செய்தற் பொருட்டே ஒழிய சுயநலத் துக்காக அல்ல.

மேலைத்தேய கலாசாரத்தில் நீங்கள் இப்பொழுது ஊறிப்போய் இருக்கி றீர்கள். அந்தக் கலாசாரம் உரிமைகள் அடிப்படையிலேயே வளர்ந்ததொன்று. உரிமைகள் என்றவுடன் என்னை நான் உலகத்தில் இருந்து பிரித்து விடுகிறேன். நான் வேறு உலகம் வேறு என்று ஆகிவிடுகிறது. உரிமைகளைக் கேட்கும் போது அங்கு தொனிப்பது ஆணவமும் அகந்தையும். ஆனால் கடமைகளை வலியுறுத்தும் போது அங்கு தொனிப்பது அன்பும் சகோதரத்துவமும் உலக ஒருமைப் பாடும். "உனக்கு இதைச் செய்வது எனது கடமை" என்று கூறி நான் ஒரு காரியத் தைச் செய்யும் போது அங்கு மற்றைய வரிடம் இருந்து நான் எதையும் எதிர்பார்ப் பது இல்லை. கடமை தான் முதன்மை பெறுகிறது. எனது உரிமைகளை நான் கேட்கும்போது அங்கு எதிர்பார்ப்பு வந்து விடுகிறது. "அதை நீ எனக்குத் தர

வேண்டும்", "அதைப் பெறுவது எனது உரிமை" என்று கூறும் போதே அங்கு ஆணவம், அகந்தை, எதிர்பார்ப்பு ஆகியவை மேலோங்குகின்றன. இந்திய கலாச்சாரம் இதற்கு மாறாக எந்தத் தருணத்திலும் பணிவையே வலியுறுத்தியது. குடிகள் அரசனுக்குப் பணிந்தார்கள். அரசன் இறைவனுக்குப் பணிந்தான்.

பணிவை வலியுறுத்திக் கடமையைச் செய்யப்பண்ணுகின்றது திருவாசக அறிவு. இறைவன் பெரியவன்; நான் சிறியவன் என்பதையே மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார் மணிவாசகப் பெருமான். திருவாசகம் எங்குமே தொனிக்கும் ஒரே கருத்து. "இறைவா நீ பெரியவன் சகல லோக நாயகன். சகலதையும் அறிந்தவன். சகல வல்லமை பொருந்தியவன். ஆனால் நான் சிறியவன். சிறுமைகள் செய்பவன். உன்னை நினைக்காதவன். அப்படி இருந்தும் என்னை ஆட்கொண்டாய் நீ" என்று கூறும் போது தன்னைச் சிறிதிலும் சிறிதாக்குகின்றார். உண்மையில் சமுதாயத்தில் மேம்பட்ட நிலையில் நின்ற அவருக்கு இறை நினைவு வந்தவுடன் அகந்தையைக் கைவிடுகிறார். இறைவனிடம் சரண் அடைகிறார். மந்திரியாக இருந்தவர் தம்மை நிந்திக்கத்தக்கவராக நினைக்கிறார். அகந்தை நிலை அழிகிறது. அகந்தை அழிந்தால்த் தான் அஞ்ஞான இருள் அகல்கிறது.

ஆனால் நாங்கள் இறைவனிடம் சரணாகதி அடையும் மனப்பக்குகவத்தைப் பெற்றுள்ளோமா என்று நீங்கள் கேட்கக் கூடும். உண்மை தான். அதனால்த்தான் கூறுகிறேன். இறைவனின் பெருமையை அவனின் தன்மையைத் திருவாசகம் மார்க்கமாக நாங்கள் அறிந்து கொண்டோமானால் தானாகவே எங்கள் அறியாமை நீங்கும் என்று. அதாவது அகந்தை என்பதும் மமதை என்பதும் அகங்காரம் என்பதும் எம்மைப் பீடித்திருக்கும் ஒரு நோய் என்பதை நாங்கள் உணரத் தொடங்கிவிடுவோம். அதை உணர்ந்ததும் பணிவு தானாகவே எங்கள் மனதில் குடிகொள்கிறது. நாங்கள் யாவரும் இறைவனின் குழந்தைகளே என்ற எண்ணம் மேலோங்குகிறது. பணிவு இருக்கும் உள்ளத்தில் பசுபதி தானாகவே வந்து குடியேறிவிடுகிறான். அந்த நிலையில் நாங்கள் எதுவும் கொண்டுவருவதில்லை. எதுவும் கொண்டு போவதுமில்லை என்ற எண்ணம் உதயமாகிறது. எதுவுமே எங்களுக்குரியது அல்ல. எங்கள் மனைவி பிள்ளைகள் என்பவர்களைக் கூட விட்டு விட்டே நாங்கள் செல்ல வேண்டி இருக்கிறது என்ற எண்ணம் வலுவடைய, வலுவடைய இந்த உலக வாழ்க்கை வாழும் வரையில் எங்கள் கடமை என்ன என்ற கேள்வியே எழுகின்றது. அப்பொழுது தான் என் கடன் பணிசெய்து கிடப்பதே என்ற சிந்தனை உதயமாகின்றது. மற்றவர்களுக்கு எம்மாலான நன்மை செய்வதை எங்கள் பணியாகக் கொண்டால் நாடு செழிக்கிறது. சமுதாயம் விருத்தி அடைகிறது. எங்கள் உள்ளம் தூய்மை அடைகிறது. பணத்தால் தான் எல்லாம் சாதிக்கலாம் என்ற எண்ணம் பணம் படைத்தவர்களிடமும் பணம் படைத்த நாட்டுப் பிரஜைகளிடமும் பொதுவாகக் குடிகொண்டிருக்கிறது. அதனால் பணத்தை எப்படி வேண்டுமானாலும் உழைக்கலாம், எந்தத் தவறான வழியிலும் உழைக்கலாம் என்று பலர் கருதுகின்றார்கள். அது தவறு. பிழையான வழியில் தேடப்படும் பணம் காரணம் இல்லாமலே எங்கள் கைகளை விட்டுப் போய்விடுகிறது. எங்கள் நாட்டில் சட்டத்தரணிகள் பலரின் வாழ்க்கையை நான் பார்த்திருக்கிறேன். வயதான காலத்தில் அவர்களில் பலர் வசதி குறைந்த நிலையில், பல இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதை நான் கண்கூடாகக் கண்டதுண்டு. இவற்றைக் கண்டும் காணாதது போல் வாழ்வது தான் எம் வாழ்க்கை. அதனால்தான் யேசு கிறிஸ்து நாதர் ஊசி வழிக்காதினிலே ஒட்டகந்தான் போனாலும் பணக்காரன்

சொர்க்கத்தை அடைய முடியாதென்றார். புத்த பெருமான் நிர்வாண நிலை என்றது எம்மனத்தால் கௌவி நின்ற சகலத்தையும் கைவிட்டு நிர்வாணமாய் நிராதரவாய் நிற்கும் போது ஏற்படும் ஒரு நிலையையே.

அற்புதப்பத்தில் மணிவாசகர் பின்வருமாறு பாடுகிறார்.

"நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நான் எனது எனும் மாயக்
கடித்த வாயிலே நின்று முன் வினை மிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
அரும்பொருள் அடியேன்
அடித்தடித்து அக்காரமுன் தீற்றிய
அற்புதம் அறியேனே."

அதாவது உலகில் நல்லவன்போல் நடித்து பொய்யான பல காரியங்களைச் செய்து "நான்" "எனது" என்ற செருக்கில் விளைந்த மயக்கம், பாம்பு கடித்த இடத்தில் விஷம்தங்கி இருப்பது போல், முன் வினையால் வந்து தங்கி இருந்து என்னைப் புலம்பவைக்கத் தானாகவே அந்த பரம்பொருள் அடியேனை தண்டித்துத் தண்டித்து பேரின்பமாகிய சர்க்கரையைத் தின்ன வைத்த அருஞ்செயலை இன்னதென்று நான் சொல்ல அறியேன் என்கிறார் மணிவாசகர். எங்களை இறைவன் புலம்ப வைப்பதெல்லாம் தண்டனைகள் தருவதெல்லாம் அவனை அறிய வைக்கவும் ஆட்கொள்ளப் படவுமே என்கிறார் மணிவாசகர். மகாபாரதப் போர் முடிந்தவுடன் பாண்டவரிடம் பேசிவிட்டு அவர்களின் அன்னையாரான குந்திதேவியிடம் வருகிறார் கிருஷ்ண பரமாத்மா. "அம்மா உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்" என்கிறார் கிருஷ்ணர். "இறைவா! நாள்தோறும் ஏதாவது ஒரு சிறு பிரச்சினையை எனக்குத் தந்துவிடு. அது போதும்" என்கிறார் அவர். "என்னம்மா இது! வரம் தருகிறேன் என்றால் அவம் கேட்கிறாயே" என்றார் கிருஷ்ணர். "கோபாலா! பிரச்சினை வந்தால்தான் உன் நினைவு எனக்கு வருகிறது. என் நேரமும் உன்னை நினைத்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பதால்தான் எனக்கு பிரச்சினைகளைக் கொடு என்றேன்" என்றாராம் குந்திதேவி. தனக்கு ஏற்படப் போகும் தொந்தரவுகளை மறந்து இறை நினைவு எந்நேரமும் தனக்கு இருக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு வரம் கேட்டார் குந்தி தேவியார்.

இறைவனைக் காண இந்த இறை நினைவு எப்படி இருக்க வேண்டும் என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறுவார். கடல் நீரில் எங்கள் தலைகளை மூழ்கச் செய்து சற்று நேரம் வைத்துக் கொண்டால் எப்படி மூச்செடுக்கப் பிரயத்தனப் படுகின்றோமோ, காற்றை நாடி விசையுடன் தலையை மேல் எடுக்கின்றோமோ, அந்த அளவு வேகத்துடன் இறைவனை நாடினால் கட்டாயம் கடவுளைக் காண்பாய் என்றார். ஆனால் மணிவாசகர் அவ்வளவு சிரமப்பட வேண்டி இருக்கவில்லை. இறைவனே அவரைத் தேடி வந்தார். வந்ததும் அவர் தம்மைத் தாமே மாற்றிக் கொண்டார். திருவாசகம் மணிவாசகரின் வாழ்க்கையில் நிகழ்ந்த மனமாற்றங்களையும் இறை லீலைகளையும், திருவிளையாடல்களையும் எடுத்துக் கூறுகின்றது. அவற்றின் ஊடாக பக்தி மார்க்கத்தில் எங்களை ஐக்கியப்படுத்த திருவாசகம் உதவிபுரிகிறது. எம்மைச் சுற்றியுள்ள மலங்கள் எவ்வாறு எம்மை இறைவனிடம் அண்மிக்க இடம் அளிக்காது தடுக்கின்றன என்பதைத் திருவாசகத்தைப் படிப்பதால் நாங்கள் உணரக்கூடியதாக இருக்கிறது. இறை உணர்வு வந்து விட்டதற்கு அடையாளம் கண்ணீர் தான். "அழுதால் உன்னைப் பெறலாமே" என்று மணிவாசகரே கூறி உள்ளார். இறைவழி நாட வேண்டுமானால் திருவாசகத்தை நீங்கள் புரட்டிப் பாருங்கள். அழப் பழகிக்கொள்ளுங்கள். அழுதால் அவனைப் பெறலாம்.

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தமாக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் எனுந் தேன்.

என்னை அழைத்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

வணக்கம்

(முற்றும்.)

"பொது சன நூலகம்"
யாழ்ப்பாணம்



தொடர் - 15

# கந்தபுராண சிறுவர் அமுதம்

- மாதாஜி

## 47. சூரியனும் நடுங்கினான்

சூரபன்மனாகிய தந்தையின் கட்டளையை மகனாகிய பானுகோபனின் செவிகளில் படுதலும், காற்றிலும் கடுவேகமாக மகன், தந்தை முன் நின்றான். "தந்தையே என்னை அழைத்த காரணம் யாது" என்று கேட்டான். "மகனே! திருச்செந்தூரில் முருகன் என்ற பாலன் எம்முடன் போர் செய்ய, பல இலட்ச வீரருடன் வந்திருக்கிறான். எமது வீரமகேந்திரபுரி நகரம், பாலனாகிய கந்தனும் சிறியவர்களும் முற்றுகை இடவந்துள்ளனர். உடனே சதுரங்க சேனைகளுடன் போருக்குப் புறப்படு என்று சூரன் கட்டளையிட்டான்.

போருக்குத் துடிக்கும் தோள்களையுடைய பானுகோபன், சேனைகளுடன் போருக்குப் புறப்பட்டான். இச்செய்தியை நாரதர் அறிந்திருந்தார். ஏமகூடத்திலிருந்த கந்தப்பெருமானிடம் சென்றார். முருகப்பெருமானை வணங்கினர். "சுவாமி பானுகோபன் பல்லாயிரம் படைகளுடன் போர் முரசு முழங்கித் தங்களை எதிர்க்க வருகின்றான். பானுகோபனை நீங்களும் சிவபெருமானுந்தான் கொல்ல முடியும். மற்றும் எவராலும் கொல்ல முடியாத மகாவீரன். அவன் இந்திரனை வென்றவன். மாயங்களில் வல்லவன். பிரமாவிடம் அஸ்திரமும், இயமனிடம் சூலமும், வருணனிடம் பாசமும் கவர்ந்தவன். ஆகையால் நீங்களே போருக்குப் புறப்படுங்கள்" என நாரதர் கூறினார்.

முருகப்பெருமான் புன்முறுவல் செய்தார். வீரவாகு தேவரை அழைத்துப் போருக்குச் செல்லும் படி பணித்தார். வீரவாகுதேவர் முருகப்பெருமானின் கட்டளையைச் சிரமேற்கொண்டார். தனது தம்பிமார்களுடனும், இலட்ச பூதப்படைகளுடனும் மகேந்திரபுரிக்குச் சென்றார். இச்செய்தியை அசுரவீரர்கள் பானுகோபனிடம் ஓடிச்சென்று கூறினார்கள். அதைக் கேட்ட பானுகோபன், கைகொட்டி (கைதட்டி) "என்னை எதிர்த்து வந்திருக்கும் வீரர்களை அழிப்பேன்" என்று ஆரவாரித்துப் போருக்குப் புறப்பட்டான்.

அசுர சேனைகளுக்கும் பூத சேனைகளுக்குமிடையே போர் தொடங்கியது. அசுர சேனைகள் அளவற்ற ஆயுதங்களால் போர்புரிய, பூதகணங்கள் மரங்களையும் மலைகளையும் பிடுங்கி எறிந்து போர் செய்தனர். இருதரப்பினரும் ஊழிக்காலம் போன்று பெரும் கோபத்துடன் போர் செய்தமையால், குருதி, வெள்ளம் போன்று பாய்ந்தது. ஆரம்பத்தில் அசுர சேனைத்தலைவனாக அனலி இருந்தான். அனலி தன் கையிலிருந்த தன் தண்டினால் சிங்கனின் தலையில் அடித்தான். சிங்கன் அவனைப் பிடித்துச் சுழற்றித் தரையில் அடித்தான். அவ்வளவில் அனலி இறந்தான்.

தண்டன் என்ற அசுரன் சேனைத் தலைவனாக வந்தான். அவன் சிங்கனுடன் போர் செய்ய முயன்ற போது சிங்கன் அனலியின் தண்டைப் பறித்து தண்டனைத் தாக்கினான். தண்டனும் தன் கைத் தண்டினால் தாக்க இருவரும் பெருமூச்சுவிட்டு மயங்கி கீழே வீழ்ந்தார்கள். தண்டன் கீழே மயங்கி விழுந்ததை மாயன் என்னும் அசுரன் கண்டான். உடனே தேரில் போர்க்களம் வந்தான். இதனைக் கண்ட பூதகணநீலன் மாயனைத் தண்டத்தால் தாக்க, மாயன் சூலத்தால் தாக்கினான். நீலனின் நெஞ்சிலிருந்து உதிரம் பெருக்கெடுத்தோடியது. நீலன் மயங்கி நிலத்தில் வீழ்ந்தான். மயக்கம் நீங்கியபின் நீலன், மாயனின் மார்பில் ஓங்கி அடித்தான். கழுத்தில் கடித்தான். இவ்வாறு கடும்போர் நடந்தது. பூதங்களின் கடும் தாக்குதலால் அசுரர்கள் சிதறி ஓடினார்கள்.

உயிர் பிழைத்தால் போதும் என்று அசுரர்கள் தலைதெறிக்க ஓடுவதைப் பானுகோபன் கண்டான். “நான் போரில் தலைமை தாங்காமல், படைகளை முன்னால் அனுப்பியதால்தான் இந்தநிலை ஏற்பட்டது” போனது போகட்டும் நானே நேரே போருக்குப் போவோமென்று, பூதசேனைகளிடையே புகுந்தான். தனது வில்லை வளைத்து கணக்கற்ற அம்புகளை பூதகணங்கள் மேல் ஏவினான். பூதவீரர்கள் மலைகளைப் பெயர்த்து பானுகோபன் மீது எறிந்தார்கள். பானுகோபன் அந்த மலைகளைத் தனது பாணங்களால் தடை செய்தான். பின்னர் பானுகோபன் ஆயிரம் கோடிப் பாணங்களைப் பூதசேனைகள் மீது விடுத்தான். இதனால் பல பூதசேனைகள் இறந்தன சிலர் வீரவாகு தேவரிடம் ஓடினார்கள்.

பூதவீரர்கள் சிதறி ஓடுவதைக் கண்ட பூதப்படைத் தலைவன் உக்கிரன் ஆரவாரத்தோடு ஒரு தண்டாயுதத்தை எடுத்து பானுகோபன் மீது எதிர்த்து போரிட்டான். பானுகோபன் பெரிய வில்லாளி அல்லவா

பானுகோபன் ஆயிரமாயிரம் பாணங்களை உக்கிரன் மீது ஏவினான். உக்கிரனிடம் அம்பு வில்லு கிடையாது. உக்கிரனின் கரிய மேனியில், பானுகோபனின் ஆயிரமாயிரம் அம்புகள் பட்டுக் கூர்மழுங்கி விழுந்தன. பொய்யே பேசுகின்றவன் கையில் ஒரு காலத்தில் பொருள் சேர்கின்ற மாதிரி இருக்கும். ஆனால் அது நிற்காது. எந்த வழியால் போனது என்று தெரியாது அது மறைந்து விடும். கடையரின் பொருள் அறத்திற்கு உதவாது. அதுபோலவே பானுகோபனின் ஆயுதங்களும் காணப்பட்டது. பானுகோபனின் ஆயுதங்கள் யாவும் அழிந்து விட்டன.

உக்கிரன் பானுகோபனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைகளை எல்லாம் அடித்துக் கொன்றான். பானுகோபன் வேறோர் தேரில் பாய்ந்து ஏறினான். உக்கிரன் பானுகோபனைத் தேருடன் தூக்கி ஆகாய மார்க்கமாக எறிந்தான். இதனைக் கண்ட சூரியன் அஞ்சி ஓடினான். காரணம் பானுகோபன் குழந்தையாகத் தொட்டிலில் கிடந்தபோது சூரியனின் கதிர் பானுகோபனைச் சுடப் பானுகோபன் கதிரவனைப் பிடித்து வந்து தனது தொட்டிலில் கட்டினான். அதுபோல இப்பவும் தன்னைப் பிடிக்க வருவதாக ஆதவன் நடுங்கினான்.

## 48. போருக்குப் புறப்பட்டார் முருகப்பெருமான்

உக்கிரனால் தூக்கி எறியப்பட்ட பானுகோபன் சூரிய மண்டலத்தை அடைந்தான். தேர் அங்கிருந்து வேகமாகச் சூழன்று கீழே விழுந்தது. உயிர்தப்பிய பானுகோபன் இமைப்பொழுதில் தன்னைச் சமாளித்து உக்கிரனை ஆகாயத்தில் வீச அவன் கீழே வீழ்ந்து மயங்கினான்.

கடும்போர் மூண்டது பூதவீரர்கள் சிதறி ஓடினார்கள். பின்னர் வீரவாகு தேவருடன் பிறந்த வீரகேசரி, வீரமார்த்தண்டர், வீராந்தகர், வீரமகேச்சுரர், வீரதீரர், வீரமகேந்திரர், வீரபுத்திரர் ஆகியோர் பானுகோபனுடன் போர் செய்து தோற்றனர்.

முன்பு தோற்றுச் சிதறி ஓடிய அசுர வீரர்கள், பானுகோபன் வெற்றி முகம் கண்டதும் திரும்பி வந்து அவனுடன் சேர்ந்தனர். பானுகோபன், வீரவாகுதேவரை நோக்கி ஓடி வந்தான். அதனைக் கண்ட வீரவாகுதேவர் கந்தவேளைத் தியானம் செய்து வில்லை எடுத்து நாணை மீட்டினார். இந்த நாணொலிக்குத் தேவர்கள் மகிழ்ந்தார்கள். அசுரர்கள் கிலி பிடித்து ஓடினார்கள். பானுகோபனும் வில்லை வளைத்து நாணொலி எழுப்பினான். இஃது தேவர்கட்கு ஆலகாலவிடம் போன்று காணப்பட்டது.

வீரவாகு தேவருக்கும் பானுகோபனுக்கும் கடும்போர் மூண்டது. தேவர்களும் அசுரர்களும் அச்சத்தால் நடுங்கினர். வீரவாகு தேவர் சர்வசங்கார மூர்த்தியைப்போல் போர் செய்தார். வீரவாகுதேவர், பானுகோபனின் தேரை அழித்து பானுகோபன் அணிந்த கவசத்தையும் உடைத்து, அவனுடைய மார்பைத் தாக்கினான். மார்பிலிருந்து உதிரம் வெள்ளம்போலப் பாய்ந்தது.

இதனால் தளர்ந்த பானுகோபன் பிரமதேவரிடமிருந்து பெற்ற "மோகனாஸ் திரத்தை எடுத்து விரைவாகச் சென்று வீரவாகுதேவரையும் படைகளையும் அழித்து விட்டு வா" என ஏவினான். மோகனாஸ்திரம் இருளைப் பரப்பிக்கொண்டு சென்றது. மோகனாஸ்திரம் நெருங்க நெருங்க பூதவீரர்கள் மயங்கி விழுந்தார்கள். வீரவாகுதேவரும் மயங்கி விழுந்தார். இதனை ஆகாயத்திலிருந்து பானுகோபன் கவனித்தான். உடனே பாணங்களை விடுவித்தான். பாணங்கள் அவர்களின் உடல்களைச் சல்லடை போட்டன.

இதனை முருகவேள் கண்டார். உடனே மோகனாஸ்திரத்தை எதிர்க்கும் அமோக அஸ்திரத்தை முருகவேள் தம் மலர்கரத்தால் ஏவினார். அது வேகமாகச் சென்று மோகனாஸ்திரத்தின் மாயைகளைக் கெடுத்து மீண்டும் முருகவேளிடம் சென்றது. வீரவாகுதேவர் முதலியோர் மயக்கம் நீங்கி எழுந்தார்கள்.

மயக்கம் தெளிந்து எழுந்த வீரவாகுதேவர், "வஞ்சனையால் வலிமை கெடுத்து பானுகோபனை உடனே கொல்லுவேன்" னென்று பாசுபதாஸ்திரத்தைக் கையிலெடுத்தார். பானுகோபன் கண்டு "இனிமேல் நான் இறப்பது திண்ணம்" என்று நினைந்து அங்கிருந்து மாயமாக மறைந்தான். அசுர வீரர்களும் மறைந்து ஓடி விட்டனர். மறைந்து

செல்கின்றவர்களைக் கொல்லுதல் யுத்த தர்மம் அல்லவென்று ஆயுதத்தை விடுக்காது விட்டார். வீரபத்திரரும் பூதவீரர்களும் வெற்றி வாகையுடன் முருகப்பெருமானிடம் சென்றனர். முருகப்பெருமான் வீரர்கட்கு விடை கொடுத்தனுப்பினர்.

விண்ணில் மறைந்த பானுகோபன் தோல்வியும் பெரும் அவமானமும் கொண்டு, புறக்கடை வழியாக மகேந்திரபுரி சென்று புண்ணுக்கு மருந்து தடவிக் கொண்டிருந்தான்.

சூரபன்மன், தன் மகன் பானுகோபன் வெற்றியுடன் வருவானென்று நினைத்து ஏமாந்தான். பின்னர் தானே இலட்சக் கணக்கான நாற்படை திரட்டிப் போருக்குப் போக ஆயத்தமானான்.

பூமி அதிர அசுரப்படைகள் அணிவகுத்துச் சென்றபோது, பூமியைத் தாங்கும் ஆதிசேஷன் பாரம் தாங்க முடியாது நெளிந்தான். எட்டுத்திக்குப் பாம்புகளும் யானைகளும் அஞ்சின. அணிவகுத்துச் சென்ற யானைகள் பிளிறிய ஒலி எட்டுத்திக்குகளையும் கிளித்துக் கொண்டு பரவியது.

இவ்வாறு சூரபன்மன் நாற்படையுடன் போருக்கு வருவதை அறிந்த இந்திரன், கந்தவேளிடம் ஓடினான். முருகப்பெருமானின் திருவடிகளை வணங்கி “எம்பெருமானே! சூரபன்மன் இலட்ச வெள்ள சேனைகளுடன் வருகின்றான். அவனைத் தேவரீர் வெல்ல வேண்டுமென இறைஞ்சினான். எங்களுடைய நாட்டையும் அரசையும் மீட்டுத்தர வேண்டும்” என்றான்.

“அஞ்சாதே அப்பனே” என்று திருவாய் மலர்ந்த , முருகப்பெருமான், வாயுதேவனைத் தேரைக் கொண்டு வரும்படி பணித்தார். அசுரரை அழிக்கவும், அமரரை வாழவைக்கவும் உதித்த முருகப்பெருமான் போர்க்கோலம் பூண்டார். மனோவேகத் தேரில் புறப்பட்டார். கந்தவேள், கடலும் அஞ்சும்படி பூதசேனைகளும் வீரவாகுதேவரின் படைகளும் போர்க்கோலத்துடன் புறப்பட்டன.

(தொடரும்..........)

## சிறு சிறு தகவல்கள்:

**பஞ்சபூதத் தலங்கள்:**

1. மண் - திருவாரூர் சுவாமி, புற்றிடம் கொண்டார்.
2. நீர் - திருவானைக்கா சுவாமி, அகிலாண்டேஸ்வரர்.
3. நெருப்பு - திருவண்ணாமலை சுவாமி, அண்ணாமலையார்
4. ஆகாயம் - சிதம்பரட் சுவாமி, சிற்சபேசர்.

**சரவணப்பொய்கையில் ஆறு உருவில் உதித்த முருகப்பெருமானுக்குப் பாலூட்டி வளர்த்த ஆறு கார்த்திகைப் பெண்கள்:**

1. அம்பா 2. துவா 3. நிகர்த்தினி 4. அப்ரகேந்தி
5. மேகேந்தி 6. வர்ஷயேந்தி

# மாவைக்கந்தன் உற்சவத்தை முன்னிட்ட கவியாக்கம்
## (22-07-2004 கொடியேற்றம், 15-08-2004 ஆடி அமாவாசைத் தீர்த்தம்)

# சரவண பவனென்று பாடுமனமே



மாவையிலே கோயில்கொண்ட மயில்வீரனே மால்
மருகனுனைக் கண்டுகரம் கூட்டித்தொழவே
பாவையர்கள் இருவரோடும் கூடிநடந்தே அந்த
பச்சைமயில் மீதெழுந்தே இச்சையோடுமே
கோலவெழில் பொங்கும்கொடி ஏற்றும்காட்டி எங்கும்
கொஞ்சுதமிழ் பக்தர்நெஞ்சில் அருளொளிகாண
இலங்கும்வடி வேலழகன் வாசலிலென்று நாமும்
இனியகொடி ஏற்றமதை கண்டுதொழுவோம்?

ஔவையோடும் மாயவிளை யாடல்செய்தவன் அவன்
அகத்தியர்க்கு ஞானம்தந்து ஏற்றுக்கொண்டவன்
சிவைகொடுத்த வேலைமகிழ்ந்து வாங்கிக்கொண்டவன் அவன்
சிங்கார மயிலிலேறி உலகம்கண்டவன்
பாவையர்கள் இருவரோடும் கூடிநிற்பவன் தமிழ்ப்
பண்பொளிர குன்றுதோறும் ஆடல்புரிபவன்
மாவைப்பதி மீதிலங்கும் மகிமைமிக்கவன் மான
மறத்தமிழர் நெஞ்சினிலே வாழுகின்றவன்

அருணகிரி நாதர்மன மாசுகளைந்தவன் அவர்
அரியதிருப் புகழிசையில் மயங்கிநிற்பவன்
இருள்கெடுத்து ஒளிபடைக்கும் இறைவனானவன் என்றும்
ஈடில்லாத பெருங்கருணைத் தேன்சொரிபவன்
குருவுமாகிப் பிரணவமெய்ப் பொருளும் சொன்னவன் ஞானக்
குழந்தையாகி சுவாமிமலை மீதொளிர்பவன்
சுருதிகளின் உறைவிடமாய் விளங்குகின்றவன் உள்ளத்
தூய்மையினில் என்றுமெழில் நாட்டுகின்றவன்.

அல்லல்கெட நல்லருளை சிந்துகின்றவன் அவன்
ஆறுமுகம் ஆறிரண்டு விழிபடைத்தவன்
சொல்லும்திருப் புகழினிக்கச் சந்தமானவன் நல்ல
சோதிமணி வேலெடுத்து ஆடுகின்றவன்
கொல்லும்கரி புலியினுரிப் போர்வைகொண்டவன் அந்தக்
கொன்றைமலர் மாலைகொண்டோன் மைந்தனானவன்
வெல்லும்வடி வேலெடுத்து விந்தைசெய்பவன் எங்கள்
வினையகற்றி நலம்படைக்கும் மாவையழகன்.

கவியாக்கம்: **சு. குகதேவன்,** தெல்லிப்பழை.

# நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவில்

சைவத்திரு கா. சிவபாலன்

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தென்மேற்காகக் கடல்களால் சூழப்பெற்ற பல தீவுக் கூட்டங்கள் உள. இவைகள் "சப்ததீவுகள்" எனவும்படும். இத்தீவுகளுக்குந் தமிழ் நாட்டிற்கும் வழிபாட்டிலும், வாணிபத் துறையிலும் பண்டை நாட்களில் பெருந் தொடர்புகள் இருந்திருக்கின்றன. அந்நாளில் இராமேசுவரப் பெருமானுக்கு நெடுந்தீவில் (பசுத்தீவு) இருந்து பாலும், கச்சைதீவில் இருந்து பூசைக்கு வேண்டிய பூக்களும் யாழ்ப்பாணத்தரசர்களால் அனுப்பப்பட்டு வந்ததாக வரலாறு உண்டு. இப்படியானஇத்தீவுக் கூட்டங்களுள் வரலாற்றுச் சிறப்புமிக்கது நயினாதீவு ஆகும்.வரலாற்றுச் சிறப்போடு சைவர்களது வணக்கத்துக்குரிய புராதன சக்திபீடத் தலமகிமை பொருந்தியதும் இதுவாகும். பண்டைநாளில் தமிழ் நாட்டவர்கள் யாத்திரை செய்யும் ஈழத்துத் திருத்தலங்களுள் இவ்வாலயமும் ஒன்றாக விளங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னரெல்லாம் யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் சென்று, வத்தைகளிலும், வள்ளங்களிலுமே நயினாதீவு செல்வர். இப்பொழுது புங்குடுதீவுவரை நெடுஞ்சாலை வசதி உண்டு. இதனால் இப்போ புங்குடுதீவிலிருந்து இயந்திரப்படகு மூலம் இங்கு செல்கின்றனர். இதுவே இக்காலச் சுருக்கமானதும், சுலபமானதுமான வழியாகும்.

ஈழத்தின் வடகோடியில் ஆதியில் நாகர் என்ற இனத்தவர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் சிவ வணக்கத்தினராவர். இவர்கள் கடவுள் பத்தியிலும், தவத்திலும், சீர்திருத்தத்திலும் மிகவுஞ் சிறந்திருந்தனர். இவர்கள் தங்களுக்குத் தண்டனையைத் தேடிக்கொடுக்கின்ற ஐந்து புலன்களையும் அடக்கி, தங்களுக்கு நித்திய பேரின்ப வாழ்வு அருளவேண்டுமென்ற நினைப்பில் கடவுளை வழிபாடு செய்து வந்தனர். இதற்காகப் பல கோவில்களைக் கட்டிச் சிலை வைத்து வணங்கி வந்தனர். அப்படியான நாகரிக வாழ்வு வாழ்ந்த நாகர்கள் காலத்தில் உருவாய கோவில்களில் ஒன்றுதான் நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவிலாகும். இந்நாகர்களையும் இவர்களது வழிபாட்டினையும் நினைவுபடுத்துவனவே வடமராட்சி கிழக்கிலுள்ள "நாகர் கோயிலில் அமைந்துள்ள நாகதம்பிரான் கோயில், யாழ் மாவட்டக் கரைச்சிப் பகுதி ஊர்களில் ஒன்றாகிய புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயில், மாங்குளத்தையடுத்த புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் கோயில், மூதூரிலுள்ள கட்டை பறிச்சான் நாகதம்பிரான் கோயில், கொக்கட்டிச்சோலை பண்டாரிவெளி நாகதம்பிரான் போன்ற கோயில்களாம். ஆதிநாகர் கட்டி வழிபட்ட புராதன ஐந்தலை நாகவழிபாட்டுத் திருத்தலங்களின் அழிபாடுகள்" மதவுவைத்த குளம், குருந்துக்குளம் போன்ற இடங்களில் உள. இன்னும் இன்றும் பூநகரியில் நாகதேவன்துறை என்னும் பெயருடைய துறை ஒன்று இருந்து வருவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் நாகர், நாகநாதன், நாகப்பர், நாகமணி, நாகேந்திரன், நாகராசா, நாகையர், நாகலிங்கம், நாகம்மா, நாகேசுவரி, நாகபூஷணி, நாகநந்தினி, நாகலட்சுமி, நாகரத்தினம் போன்ற இன்றைய வழக்காற்றுப் பெயர்களும் இந்நாட்டுப் பண்டை நாகரை எமக்கு நினைவூட்டும் காரண இடுகுறிப் பெயர்களேயாம்.

இன்னும் நாகர்களால் வழிபடப்பட்ட ஆலயங்களில் ஒன்றே மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரமாகும். திருக்கேதீச்சரநாதருக்கு **"நாகநாதர்"** என்ற இன்னொரு திருப்பெயர் இருப்பது இதனை வலியுறுத்துகின்றது. எப்படி நாகர் இந்நாட்டுத் தொன்மைமிக்க நாகரிக மக்களாகக் கருதப்படுகின்றனரோ, அப்படியான தொன்மை சைவத்திற்கும் நயினை நாகபூஷணி கோயிலுக்கும் ஈழத்தில் உண்டு என்பது அறியமுடிகின்றது.

நயினாதீவு நான்கு மைல் சுற்றளவு கொண்ட ஊர். அதில் 150 பரப்பு நிலம் கோயிலும் கோயில் சார்ந்த இடங்களுமாகும். நயினாதீவுக்கு நாகதீவு, "மணிபல்லவம்", மணித்தீவு,பிராமணத்தீவு போன்ற பெயர்களுமுண்டு. 'மணிமேகலை' என்ற காவியத்தில் வரும் 'மணிபல்லவம்' இதுதான் என்பது பெரும்பாலான ஆராய்ச்சியாளர் முடிபு. இங்கு கோயில் கொண்டிருக்கும் பெருமாட்டி நாகம்மாள் என்றும்,நாகேசுவரி என்றும் போற்றப்படுவாள். இவ்வாலயம் எப்போது தொடக்கப்பட்டதென அறுதியிட்டுக் கூறமுடியாததாகும்.உமையம்மைக்குரிய கீர்த்திவாய்ந்த 64 சக்தி பீடங்களுள் இதுவும் ஒன்றெனக் கூறப்படுகின்றது. ஆலயம் பற்றிய கர்ண பரம்பரைக் கதை, "முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையின் படிமத்தை அயற்தீவான புளியந்தீவிலிருந்த நாகமொன்று பூசித்து வந்ததாகவும், ஒருநாள் அந்நாகம் அர்ச்சனை செய்தற்காகப் பூக்களைக் கொய்து கொண்டுவரும் வழியில், கருடன் (பருந்து) ஒன்றைக் கண்டஞ்சிக், கடற்கரைக்கு அண்மையிலுள்ள கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டிருந்ததாகவும், கருடனும் இதனைக் கொல்லும் நோக்குடன் எதிரிருந்த கல்லொன்றில் இருந்ததாகவும், இந்நேரம் இவ்விரண்டினதும் பகைமையை அக்கடல் வழியாகச் சென்றுகொண்டிருந்த வணிகன் ஒருவன் கண்டு அவற்றைச் சமாதானம் செய்யும் நோக்கோடு தான் சென்றுகொண்டிருந்த கலத்தை நிறுத்தி, கருடனை அவ்விடத்தை விட்டு விலகும்படி கேட்டதாகவும், அதற்குக் கருடன் உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து என்முன் வைத்தால் விலகுவேன் என்றதாகவும், அவனும் அப்படியே செய்யக் கருடன் விலகியதாகவும், ஊர் திரும்பிய வணிகனது வீட்டிலே பேரொளி ஒன்று தோன்றியதாகவும், அங்கெல்லாம் கண்ணைப் பறிக்கும் நாகரத்தினக் கற்கள் காணப்பட்டதாகவும், இவை நயினாதீவு அம்பிகையின் திருவருட் செயலென எண்ணிய வணிகன் யாத்திரை புறப்பட்டு வந்து அம்பாள் கோயிலைப் பெரிதாகக் கட்டி நயினாபட்டர் என்பவரைப் பூசைக்கு அமர்த்தி ஆலயத்தை நிர்வகித்து வந்ததாகவும்" கூறப்படுகின்றது. இப்பொழுதும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் என இரு கற்களைப் பொதுமக்கள் காட்டும் வழக்கம் இங்கு உண்டு.

இக்கோயிலுக்கும் வணிகச் செட்டிகளுக்கும் தொடர்புண்டென்பதை இவ்வாலயத்து நகரத்தார் மடம் தெளிவு படுத்துகின்றது. மேலும், இத்தீவு நீண்டகாலம் கப்பற்போக்குவரத்துத் துறைமுகமாக இருந்ததென்பதை இத்தீவின் மேற்குக் கடற்கரையிலுள்ள படகுத்துறை என்னும் பெயர் கொண்ட இடமும், இத்தீவில் கண்டெடுக்கப்பட்ட 12ஆம் நூற்றாண்டுப் பொலநறுவை அரசனாகிய பராக்கிரமபாகுவின் கற்சாசனம் ஒன்றும் வலியுறுத்துகின்றன.

இப்படியாகப் பெரும்புகழுக்கும், மகிமைக்கும், உறைபதியாக விளங்கியதுடன், கடல் வணிகரின் காவற்தெய்வமாகவுமிருந்து அருள்பாலித்து வந்த அன்னையின்

இக்கோவிலும் ஏனைய கோவில்கள் போன்று பறங்கியர்களினால் இடித்தழிக்கப்பட்டது. இடித்தழிக்கப்பட்டாலும் புத்தளப்பகுதியிலுள்ள காரைதீவுக் கோயில், கற்பிட்டியிலிருந்த நாச்சியம்மன் கோயில், நீர்கொழும்பிலிருந்த மீனாட்சி அம்மன்கோயில் (மீனாட்சி ஓடையில்), பெந்தோட்டை (Bentota) காளி அம்மன் கோயில் போன்ற பழம்பெருந்தேவி கோயில்களுக்கு நேர்ந்த கதி இவ்வாலயத்திற்கு நிகழவில்லை. காரணம் இவ்வாலயச் சூழலிலுள்ளோர் சமயம் விட்டுச் சமயம் மாறாதிருந்தமை யேயாகும். மேற் கூறிய பிரதேசக் கோவில்கள் அழிவோடு அழிந்தமைக்குக் காரணம் சைவராக அவ்விடங்களில் வாழ்ந்தோர் தம் சமயம் மாறியிருந்தமையேயாகும்.

மேலும், பறங்கியரால் இடியுண்ட நயினை ஆலயம் ஒல்லாந்தர் காலத்தில் சிறிய அளவிற் கட்டப்பட்டது. பின்னர் காலத்துக்குக் காலம் அடியவர்களது நன்நிதியங்கொண்டு திருப்பணிவேலைகள் நடைபெற்று இன்று முழுமையான ஒரு பெருங்கோவிலாக விளங்குகின்றது. கோயிலின் கிழக்கு வாயிலைக் கம்பீரத் தோற்றத்துடன் அணிசெய்வது 1935ல் கட்டி முடிக்கப்பட்ட தூலலிங்கமாகிய கோபுரமாகும்.

ஆலயத்தின் இப்போதுள்ள விமானம், இன்றைய திருக்கேதீச்சரம் திருப் பணிகளை மேற்கொண்டு நிறைவுசெய்த காரைக்குடிச் சிற்பவல்லுனர் திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியாரினால் பாண்டி நாட்டுச் சிற்பமுறையில் அமைக்கப்பட்டு 25-4-51இல் குடமுழுக்குச் செய்யப்பட்டதாகும்.

உற்சவ காலத்தில் இப்போது அம்பாள் உலா வருந்தேர் "தேர்த்திருப்பணிச் சபை" என ஏற்பாடு செய்யப்பட்ட சபைஒன்றின் மூலம் செய்துமுடிக்கப்பட்டு, 8-7-57இல் வெள்ளோட்டத்திற்கு விடப்பட்டதாகும். இதனைப் பூர்த்திசெய்தவர் அருட்டிரு குன்றக்குடி அடிகளாரின் ஆலோசனைப்படி அழைக்கப்பட்ட தமிழ் நாட்டு நாகர்கோயிலைச் சேர்ந்த திரு. எஸ். குமாரசாமி ஆசாரியார் ஆவார். இத்தேர் இன்று ஈழத்திலுள்ள முதன்மை பெற்ற சித்திரலங்காரச் செய்கைத் தேர்களுள் ஒன்றாகும்.

இவ்வாலயத்தில் நாள்தோறும் ஆறுகாலப் பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன. உற்சவம் ஆனிப் பூரணையில் தீர்த்தமும், அதற்கு முதல் நாள் தேர்த்திருவிழாவும் வரக்கூடியதாகப் பதினைந்து நாட்கள் நடைபெறும். உற்சவ காலத்தில் திரள் திரளாக நாகம்மாளைத் தரிசிக்க அடியார்கள் யாத்திரை செய்வர். அம்பாள் தேரில் திருஉலா வரும்போது மெய்யுருகும் அடியார்கள் இடும் "அரோகரா" ஒலி பாம்பன் கடல் ஒலியுடன் கலந்து வானளாவும். அம்பாளின் தேர் இருப்புக்கு வரும்வரை எந்த ஒரு அடியாரும் படகோட்டிகள் கூட ஆலயத்தை விட்டு ஒரு அடி கூட நகரமாட்டார்கள். கேணித் தீர்த்தம் முடிந்த மறுநாள் இரவு இங்கு தெப்போற்சவம் நடைபெறும். இவ்வாலயத் தனிச்சிறப்பு அம்சங்களுள் இதுவும் ஒன்றாகும். மேலும் நவராத்திரிக் காலத்தில் பார்க்கும் அடியவர் மனதில் பக்தி அநுபவப் பெருக்கு ஏற்படுமாறு விரிவாக இங்கு நடைபெற்று வரும் ஸ்ரீசக்கர பூசையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தலம் பல மகான்களுக்கும், ஞானிகளுக்கும், அறிஞர்களுக்கும், சாதனையாளர் களுக்கும், புலவர்களுக்கும் இருப்பிடமாய் அமைந்துள்ளது. இங்கு

ஒரு தனியான ஆத்மீக அலை உண்டு. அந்த அலைதான் பூசை, நேர்த்திக்கடன் என்று கூறிக்கொண்டு நாளாந்தம் அடியார்களை அள்ளுப்பட்டுத் தன்னிடம் ஓடிவரச் செய்கிறது.

இன்று இவ்வாலயம் **ஒன்பது பேர் கொண்ட அறங்காவலர் சபை** ஒன்றின் மூலமே நிர்வகிக்கப்படுகிறது. இவ்வாலயப் பிரதம குருக்களாக விளங்கி அமரரானவர் தான் எல்லோருக்கும் நன்கு அறிமுகமானவரான **சிவபூசாதுரந்தரர் பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாயநாதக்குருக்கள்** ஆவார்.

இவ்வாலய திருஊஞ்சல் பாட்டு வண்ணை திரு. ம. அமரசிங்கப் புலவரினால் பாடப்பெற்றதாகும். ஆலயச் சிறப்புப் பற்றிக் கூறும் பல நூல்கள் உள்ளன:

**நயினை நாகேஸ்வரியம்மன் பேரில் வெளிவந்த சில நூல்கள்:**

1. நயினாதீவு நாகேஸ்வரியம்மை பதிகம் - **அராலி திரு. முத்துக்குமாருப்புலவர்.**
2. நயினை நாகாம்பிகை பதிகம், நாகை திருவிரட்டை மணிமாலை, திரு நாகதீபப் பதிகம் - **வேலணை தம்பு உபாத்தியாயர்**
3. ஸ்ரீ நாகபூஷணி அந்தாதி மாலை - **நயினாதீவுச் சுவாமி**
4. நயினை நீரோட்ட யமக அந்தாதி, நயினைமான்மியம் - **நயினை நாகமணிப்புலவர்**
5. நயினை நாகாம்பிகை பதிகம் - **நயினை திரு. வ. கு. சரவணபவன்**
6. மனோன்மணி மாலை - **யோகி சுத்தானந்தபாரதியார்**
7. தேவி பஞ்சகம் - **நயினை பெரியார் க. இராமச்சந்திரா**
8. நாகேஸ்வரி பதிகம், நாகராஜேஸ்வரி திருவிரட்டை மணிமாலை - **நயினை திரு. வே. செல்வநாயகம்**
9. நயினை நாயகி தோத்திரம் - **திரு. வை. சீ. வைத்தியலிங்கம்**
10. நயினை நாகம்மாள் பதிகம் - **நயினை திரு. நா. க. சண்முகநாதபிள்ளை** (அதிபர்)
11. நயினை நாகபூஷணியம்மை பிள்ளைத்தமிழ் - **கரவை கவிராயர் வ. சிவராசசிங்கம்**
12. நயினை நாகேஸ்வரி வரலாறு - **முதலியார் குல சபாநாதன்**

## குலவாரிசை

திங்களோடு செவ்வாய்
வெள்ளி அன்னைக்குகந்த
மங்கள நாள்களில் அவள
ருளை வேண்டித்தொழ
குங்குமம் தருவாள் குல
வாரிசைத் தருவாள்
சங்கத் தமிழில் புலமையும்
தருவாள் அன்னை ஸ்ரீதுர்க்கா.

**ஜெயகேமலதா,** தொட்டிலடி.

## எளியவர் வாழ்வை

**சிங்கவாகனநியே சிவந்தநல்**
**திருமேனி யழகியே - அடியவர்க்கு**
**பங்கம் வருங்கால் யாமிருக்கப்**
**பயமேனென தாயவள்**
**சங்கு சக்கரம் தண்டமும்**
**சூலமும் முன்னே வரும்**
**எங்கும் நிறைந்த துர்க்கா**
**எளியவர் வாழ்வைக் காப்பாய்!**

**இராமபெபாலன்,** கொக்குவில்.

# பச்சிலைகள் சிறப்பியல்புகள்

ஆ. கதிரமலைநாதன்

"பச்சிலைகள் மக்கட் செல்வத்தைத் தருவது"

வில்வம், துளசி, அறுகு, மருக்கொழுந்து, மாசிப்பச்சை, திருநீற்றுப் பச்சை முதலியவை இராட்சத - தாமதபத்திரங்கள் ஆகும். ஆகையினால் இவை முதலியபத்திர - புஷ்பங்களை உண்டாக்கியவர்களும் அவற்றினை விதிப்படி எடுத்துத் தொடுத்தவர்களும், அவற்றினால் பூசித்தவர்களும் சகல போக மோட்சங்களையும் அடையலாம்.

**பஞ்சவில்வம்:**

"ஸ்ரீபத்திரம்" என அழைக்கப்படும் வில்வமிலை பச்சிலைகளுள் மிகவும் சிரேஷ்டமானது. வில்வம் இலை 'வில்லவத்தளம்' என்றே சிறப்பித்து அழைக்கப்படுகின்றது.

இத்தகைய வில்வத்தின் பெயர் அடிப்படையில் வில்வத்தினையும் உட்படுத்தி 'பஞ்சவில்வம்' என ஐந்து பச்சிலைகள் குறிக்கப்பட்டுள்ளன.

1. வில்வம் இலை
2. நொச்சி இலை
3. மாவிலங்கை இலை
4. முட்கிழுவை இலை
5. விளாத்தி இலை

இவ்வைந்துடனும் கடம்பு இலையையும் சேர்த்து 'ஷடவில்வம்' என ஆறு பச்சிலைகளாகக் கொள்ளப்படுகின்றன.

**துளசித்தாமம்:**

மேலே சொல்லப்பட்டவற்றைப் போன்று துளசி வைணவர்களினால் மிகவும் உயர்ந்ததாக மதிக்கப்படுகின்றது. துளசிச் செடியை 'துளசித்தாய்' என்றே தீபமேற்றி, மலரிட்டு வழிபடுவர். மேலும் துளசி இலையையும் 'துளசித்தாமம்' என்றே அழைப்பர். விஷ்ணுவைக்கூட 'திருத்துழாய்மார்பன்' என வர்ணிப்பர்.

பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான ஆண்டாள் துளசிச் செடியின் கீழிருந்தே பெரியாழ்வாரினால் எடுத்து வளர்க்கப்பட்டவர் எனவும் கதை வழங்குகிறது.

**பச்சிலை சாத்துதல்:**

வருடாந்த உற்சவங்களின் பிரதான அங்கமாக வரும் தேர்த்திருவிழா அன்று தேர் இருப்புக்கு வந்ததும், எழுந்தருளித் திருவுருவங்கள் இருக்கையிலிருந்து இறக்கப்பட்டு கொண்டுவரும்போது, பச்சை சாத்தப்பட்டு-பச்சைமயமாகவே காட்சி தருவதனைத் தரிசிப்பதே கண்கள் செய்த பாக்கியம் என்பர் பக்தகோடிகள்.

- பச்சை நிறப்பட்டாடை இடையில் அணியப்படும்
- பச்சை நிற அங்கவஸ்திரம், சட்டை மேலே அணியப்படும்.
- பச்சை நிறக்கற்கள் பதித்த ஆபரணங்கள் அணியப்படும்.
- பசுமையான (அவர்கட்கு உகந்த) பச்சிலைகளாலான மாலை அணியப்படும்.
- பசுமையான புதிய பச்சிலைகளினால் திருவுருவங்களின் பின்னணி (திருவாசி) அலங்கரிக்கப்படும்.
- பச்சை நிறக் குடை தலைக்குமேல் பிடிக்கப்படும்.

நூலகம்
யாழ்ப்பாணம்

இதற்கெல்லாம் மேலாக இறைவனுக்குரிய அர்ச்சனைகள் கூட பச்சிலைகளினாலேயே செய்யப்படும்.

**இலையமுது:**

வழமையாகச் சில கோவில்களில் எழுந்தருளித் திருமேனிகட்கு உபசாரங்கள் செய்யும் போது வெற்றிலைச் சுருளையும் சிவாச்சாரியார் சுற்றிக்காட்டுவதனை அவதானித்திருக்கலாம்.

இந்துமத வழிபாடு கலாசாரம் என்பன உச்சம் பெற்றிருந்த சோழர்காலப் பகுதியில் இது ஒரு உபசாரமாக இல்லாது 'இலையமுது படைத்தல்' என்றே அழைக்கப்பட்டது. எவ்வாறு புத்தமுது நிவேதிக்கப்படுகின்றதோ, அவ்வாறே அவனுக்கு வெற்றிலையுடன் பாக்கு, சுண்ணாம்பு என்பவற்றினையும் சேர்த்து இலையமுது எனப் படைத்தனர்.

இதன் பொருட்டாகவே நிபந்தங்கள் அரசர்களினாலும், அடியவர்களினாலும் நன்கொடையாகச் சிவாலயங்கட்கு அளிக்கப்பட்டதாகவும் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

*

மலர்கள் கிடைக்காதபோது குறித்த மலர்களின் இலைகளையும் கொள்ளலாம் என விதிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்தும் மலர்களுக்கு ஈடாக அதன் இலைகளும் ஏற்கப்படுவது அவற்றினைச் சிறப்பிப்பதாயில்லையா?

✡ ✡ ✡ ✡

# சிவபூமி பாடசாலை திறப்பு விழா

மனவளர்ச்சி குறைந்த சிறார்களை ஆற்றுப்படுத்துவதற்காக, இந்து சமயத்தின் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இப்பாடசாலை, கோண்டாவில் அரசடி விநாயகர் ஆலய சூழலில் உருவாக்கப்பட்டுள்ளது. பல வைத்திய நிபுணர்கள், கல்விமான்கள், விடுத்த வேண்டுகோளை ஏற்று உலக நாடுகளுக்கு ஆன்மீக உரையாற்றச் சென்ற செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன் அவர்களின் இடைவிடாத முயற்சியால் இப்பாடசாலை உருவாக்கப்பெற்றுள்ளது. எதிர்வரும் 02-07-2004 வெள்ளிக்கிழமை ஆன்மீக அன்னை




**சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்களால் இப்பாடசாலை புதிய மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இப்பாடசாலையில் கற்றுப்பயன்பெற மனவளர்ச்சிகுறைந்த சிறார்களை இப்பாடசாலையில் சேர்த்து பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

அதிபர்,<br>சிவபூமி பாடசாலை,<br>கோண்டாவில்.


**ந. சதாசிவஐயர் J. P.**<br>செயலாளர்<br>சிவபூமி அறக்கட்டளை.



இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார்
மணிமண்டபத் திறப்பு விழாவில்.



இலண்டனில் நடைபெற்ற வீரமணி ஐயர்
மலர் வெளியீட்டு விழாவில் பிரபல பாடகர்
திரு. உன்னிகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக்
கலந்து கொண்டு உரையாற்றும் காட்சி.



யாழ். இலக்கியப் பேரவை
பரிசளிப்பு விழாவில்
சிற்பி சரவணபவன் விருது
வழங்கும் காட்சி.

# அன்னை சிவதமிழ்ச்செல்வியினால் 02–07–2004இல் திறந்து வைக்கப்பட்ட சிவபூமி பாடசாலை.



சிவபூமி பாடசாலை முகப்புத்தோற்றம்.



சிவபூமி பாடசாலை முதற்தொகுதி மாணவர்கள்

அட்டைப்பதிப்பு : பிள்ளையார் அச்சகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.